மனிதர்

அபூபக்ர் (ரலி) அவர்கள்

ஓர் ஆஜானுபாகுவல்ல, அடக்கமான உடல் அமைப்புக் கொண்டவர்கள் தாம். அவர்கள் பெற்றிருந்ததும் பருத்த உடலை யல்ல, மெலிந்த உடலைத்தான். அவர்களின் உடல் நிறம் கோதுமை; அவர்கள் உண்டது கோதுமை ரொட்டியை. பெரும் நெருக்கடி நிலைகளாலும் வளைக்க முடியாத நெஞ்சம் அவர்களுக்கு. ஆனால் அவர்களின் இடுப்பு சற்று வளைந்திருந்தது. அதனால் அவர்கள் சற்றுக் குனிந்து கொண்டு தான் நடப்பார்கள். இறைவன் மீதும் அவன் தூதர் மீதும இருந்த நம்பிக்கை இறுகியது. ஆனால் இடுப்பைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த ஆடை அடிக்கடி அவிழக் கூடியது. உண்மையில் உடம்பு என்னும் ஆடையை எப்பொழுது உதறுவோம் என அவர்களின் உயிருக்கிருந்த ஆவலை உணர்த்தத்தான், அது அப்படி அடிக்கடி அவிழந்ததோ, என்னவோ?

அடக்கமிகுந்த அவர்களுக்கு இருந்தது ஒடுக்கமான முகம். ஆனால் அதில் இருந்த இரு கண்கள் அப்துல்லாஹ்வின் புதல்வரை, அல்லாஹ்வின் தூதர் எனக் கணக்கில் கண்டு கொண்ட கூர்மை உடையவை. ஒற்றுமையுடன் கடமை புரிந்த அவை, ஒன்றை விட்டு ஒன்று சற்று விலகியிருந்தன. கூரிய மூக்கு அறிவு அதிகம் இருப்பதைக் கூறுவது என்பர். அதுவும் அவர்களுக்கு அப்படித்தான் இருந்தது. அவர்களுக்குச் சற்றுச் சுருண்ட தலை மயிர் இருந்தது. ஆனால், அதன் கீழ் இருந்த மூளை சூழ்ச்சி அறியாததாகும். தலை மயிரும், தாடி மயிரும் அவர்களுக்கு வெள்ளையாய் இருந்தன. ஆனால் அவற்றிற்கு அவர்கள் மருதாணி வண்ணம் ஏற்றியிருந்தார்கள்.

குணத்தில் அவர்கள் உயர்ந்தவர்களாய் இருந்தனர். உடல் உயரத்திலும் அவர்கள் அப்படித்தான் இருந்தார்கள். ஆனால், உள்ளத்தில் அடக்கம் உள்ளவர்களாய் இருந்ததால், உயரம் அப்படி அதிகமானதாகத் தெரியாதபடி, அவர்களின் உடல் அமைப்பு இருந்தது. மென்மையான உள்ளம் உள்ளவர்களாய் இருந்த அவர்கள், மென்மையான உடல் உடையவர்களாயும் இருந்தனர். அவர்களின் நரம்புகள் உடலில் நன்றாகத் தெரியும் விதம் அமைந்திருந்தன. அல்லாஹ்வின் தூதர் சொல்லை அப்படியே பற்றி ஒழுகும் மனம் அவர்களுக்கு. ஆனால் அள்ளும் நீரை அப்படியே ஒழுக விட்டுவிடும் விரல்களை அவர்கள் பெற்றிருந்தார்கள். ஈபவர்க்கு இருப்பவை இத்தகைய விரல்கள் என்பர். அதனை எண்பிக்க அவர்களை விடச் சிறந்த ஆதாரம் தேடவேண்டியதே இல்லை. இளமை எழிலைக் கொல்லும் கூற்று என்று கூறுவர் முதுமையை. ஆனால் அவர்கள் விஷயத்தில் அது தோற்றது. முதிய வயதிலும் அவர்கள் அதிக அழகுள்ளவர்களாய் இருந்தார்கள். இறை தூதர் ஒருவருக்கு அடுத்தவராக இருந்த அவர்கள், உருவத்தில் இறைதூதர் ஒருவரை ஒத்தவராகவே இருந்தார்கள். ''இப்ராஹீம் (அலை) அவர்களைப் பார்க்க விரும்புபவர்கள் அபூபக்ரைப் பார்க்கட்டும்!'' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர். அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும், இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும் உருவத்தில் மட்டும் இருக்கவில்லை இந்த ஒற்றுமை. இறைவன் தன் திருமறையில் இப்ராஹீம் (அலை) அவர்களை 'அதிகம் பெருமூச்செறியும் ஒருவர்' என்று குறிப்பிடுகிறான். இதே பெயரைக் கொண்டே அபூபக்ர் (ரலி) அவர்களை, அவர்களின் தோழர்கள் அழைத்தனர். ஆனால் சூபியாக்கள் அபூபக்ர் (ரலி) அவர்களை 'திம்னியத்குப்ரா' நிலைக்கு உயர்ந்தவர்கள் என உரைக்கின்றனர்.

உள்ளத்தில் மட்டும் எளிமையுள்ளவர்களாய் இருக்க வில்லை அவர்கள். உடையிலும் அப்படித்தான் இருந்தார்கள். இஸ்லாமிய அரசின் அரசர்க்கும் அதிகமான கலீபா ஆவார்கள் அவர்கள். ஆனால் அவர்கள் அணிந்திருந்தது, இரு வெளிறிய செந்நிறத் துண்டுகளைத் தாம். ஒன்று, அரைக்கு மேலிருந்த உடம்பை மறைத்தது. மற்றொன்று, அரைக்குக் கீழுள்ள ஆடையாய் இருந்தது. அவர்களை அவ்வுடையில் காண் பவர்கள், அரசருக்கும் அதிகமான கலீபா எனக் கருத மாட்டார்கள், உலகை உண்மையிலேயே துறந்துவிட்ட ஒருவர் என்றே எண்ணுவார்கள். இவ்வெளிய கோலத்தில் அவர்களை மதீனாவின் தெருவில் கண்ட ஒருவர், ''ஏன் இப்படி உங்களை மாற்றிக் கொண்டு விட்டீர்கள்?'' என்று கேட்ட போது, ''அவசியமற்ற செயற்கைத் தன்மைகளிலிருந்து ஓர் இன்பமும் நான் அடையவில்லை'' என் அவர்கள் பதிலிறுத்தனர். அவர்களைக் காண வந்த அரபுச் செல்வர் களும், கோத்திரத் தலைவர்களும் அவர்களின் எளிய உடையைப் பார்த்து அகல வாயைத் திறந்தனர். அந்தச் செல்வர்களும், தலைவர் களும் தம்மிடம் இருப்பதைப் பெருக்கிக் காட்டும் ஆடம்பர உடை களை அணிந்து வந்தபோது, கலீபா இன்மையில் உழலும் ஏழை உடுத்தும் ஆடையையே அணிந்திருந்தனர். அவர்களைப் பார்த்தால், அவர்களையும் விட ஓர் ஏழை உலகில் இருக்க இயலாது என்றே எண்ணத் தோன்றும்.

அவர்களைப் பார்க்க வந்தவர்களும், அவர்களின் இவ்வெளிய கோலம் கண்டு தம்முடைய ஆடம்பர உடைகளைத் களைந்து எறிந்தனர்; ஆபரணாதிகளைக் கழற்றி எறிந்தனர். அவ்விதம் எறிந்தவர் களில் ஒருவர் துல்கலஃ.அவர் யமன் நாட்டை ஆண்ட அரச குலத்தைச் சேர்ந்தவர். அவர் ஆட்படையுடனும்,ஆயிரம் அடிமைகளுடனும் மதீனா வந்தார். அப்பொழுது அவர் மணியால் ஆன முடியை அணிந்திருந்தார்; பொன்னால் ஆன உடையைப் புனைந்திருந்தார். அவர் மட்டு மல்லாமல், அவருடன் வந்த பலரும், அவ்வித ஆடம்பர உடைகளைத் தாம் அணிந்திருந்தனர். துல்கலஃ இஸ்லாமியக் கலீபா இருந்த கோலத்தைக் கண்டார். உடனே தம் ஆடம்பர உடைகளை அகற்றினார். அன்று முதல் எளிய உடையை அணியத் தொடங்கினார். ஒருநாள் அவர் தம் இடுப்பில் தோல் வாரைப் போட்டுக் கொண்டு, மதீனா தெருவில் செல்வதைக் கண்ட அவரின் உறவினர் ஒருவர், ''மாலிக்கே! என்ன உடை நீர் அணிந்திருப்பது? எங்களை ஏன் இப்படி அவமானப்படுத்துகிறீர். அரபிகள் மத்தியில் எங்களை இழிவு படுத்துகிறீர்?'' என்று அவரைப் பார்த்துக் கேட்டபோது, ''அறியாமைக் காலத்தில் இருந்த கர்வமிக்க இளவரசனைப் போலவே நான் இஸ்லாத்தில் இணைந்த பிறகும் இருக்கவேண்டும் என விரும்புகிறீரா? ஒருபோதும் முடியாது. அடக்கமில்லாமல், இறைவனுக்கு முற்றிலும் அடிபணிதலை, அதன் மூலம் அவன் பாராட்டை அடைய முடியாது'' என்று கூறிவிட்டு, மனத்திற்குள், 'உடம்பில் குளிப்பதற்கு முன் இருந்த சேறு, குளித்த பிறகும் குறையக் கூடாது எனக் கருதும் மூடர்' என எண்ணிக் கொண்டு நடந்து கொண்டிருந்தார் அவர்.

இந்த எளிய உடை கூட அபூபக்ர் (ரலி) அவர்களுக்குச் சில சமயங்களில் இல்லாமல் போய்விடுவதுண்டு. ஒரு சமயம் அவர்கள் உடம்பை மறைத்துக் கொள்ள உடையின்றி இருக்கிறார்கள் என்பதை அறிந்து, பாத்திமா (ரலி) அவர்கள், அவர்களுக்கு உடை ஒன்றை அனுப்பி வைக்கின்றனர். அதனை அணிந்து கொண்டு அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சமூகம் வந்தபோது, ஜிப்ரயீல் (அலை) அவர்களும் வந்து விடுகின்றனர். அதில் ஓர் அதிசயம், அபூபக்ர் (ரலி) அவர்கள் என்ன உடை அணிந்தருந்தனரோ, அதே உடையில் ஜிப்ரயீல் (அலை) அவர்களும் இருந்தது. அதுபற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் கேட்டபோது ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ''தாம் மட்டுமல்ல, வானிலுள்ள அமரர்கள் அனைவரும் அபூபக்ரின் உடையில் தான் இருக்கின்றனர்'' என்றனர்.

இன்னொரு நாள் இப்படித்தான் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் நெஞ்சுக்கு நேராகக் கிழிந்த ஒரு கம்பளிச் சட்டையை அணிந்து கொண்டு, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சமூகம் அமர்ந்திருந்தனர். அப்பொழுது வந்த ஜிப்ரயீல் (அலை) அவர்கள், ''என்ன, அபூபக்ரை இந்தக் கோலத்தில் காண்கிறேன். அவர் உடம்பில் கிழிந்த சட்டை இருக்கிறது,அதுவும் நெஞ்சுக்கு நேராக் கிழிந்து இருக்கிறது'' என்றனர். அதுகேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''வெற்றிக்கு (மக்கா வெற்றிக்கு) முன்னரே, எனக்காக அவர் தம் பொருள் அனைத்தையும் செலவு செய்து விட்டார்'' என்றார்கள். அப்பொழுது ஜிப்ரயீல் (அலை) அவர்கள், ''அல்லாஹ் அவருக்கு 'சலாம்' கூறுகிறான். 'என்னைக் குறித்து நீர் திருப்தியாயிருக்கிறீரா அல்லது கோபமாயிருக்கிறீரா என்று கேளும்!' என்கிறான்'' என்றனர். அது அறிந்து அபூபக்ர் (ரலி) அவர்கள்,''என் இறைவன் மீது கோபமா? நான் என் இறைவன் மீது திருப்தியாயிருக்கிறேன்; நான்என் இறைவன் மீது திருப்தியாயிருக்கிறேன்; நான் என் இறைவன் மீது திருப்தியாயிருக்கிறேன்'' என்று மூன்று முறை கூறினார்கள். இதுதான் முதல் கலீபாவாக அவர்களைத் தேர்ந்தெடுக்க நபித் தோழர்களைத் தூண்டியது என அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றனர்.

அபூபக்ர் (ரலி) அவர்களின் உடையில் மட்டும் இருக்க வில்லை எளிமை. உணவிலும் அவர்கள் அப்படித்தான் இருந்தார்கள். பெரும்பாலும் அவர்கள் பசியுடன் தான் தம் காலத்தைக் கழித்தார்கள். சில சமயங்களில் அவர்கள் தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்கள்

பட்டினியாய் இருந்ததுண்டு. ஒரு சமயம் அவர்கள் சாப்பிடுவதில்லை என்று பிரமாணம் செய்தனர். ஆனால், அதில் (உணவுண்பதில்) பரக்கத் இருப்பதை அறிந்ததும், தம் பிரமாணத்தை முறித்து உணவுண்டனர். இறை வணக்கத்தின் இனிமையை, நிறைந்த வயிறு கெடுத்து விடுகிறது என்பதும் ஒரு காரணம் அவர்கள் தம் வயிற்றைக் காய வைத்ததற்கு. ''இஸ்லாத்தைத் தழுவியதிலிருந்து நான் வயிறு நிறைய உண்டதில்லை, என்னுடைய இறைவனை வணங்குவதில் இன்பம் காண வேண்டும் என்பதற்காக. இஸ்லாத்தைத் தழுவியதிலிருந்து நான் தாகம் தீரத் தண்ணீர் அருந்தியதில்லை, என்னுடைய இறைவனைச் சந்திக்க வேண்டும் என்பதற்காக'' என்று அவர்கள் கூறினர். இப்படிப் பசியுடன் இருப்பதை விரும்பிய அவர்களுக்கு, அவ்விதம் இருக்க வேண்டிய அவசியமும் வந்து விடுகிறது. அள்ளி அள்ளிக் கொடுத்ததால் அவர்கள் வறுமை வாயுள் தள்ளப்பட்டார்கள். அதனால் அவர்கள் சில சமயங்களில் ஆறு நாட்கள் வரை கூடப் பசியை ஆற வைக்க இயலாமல் தவித்திருக்கிறார்கள்.

ஒருநாள் நண்பகல் நேரம், வெய்யிலின் கடுமையில் கொடுமை கூடிக்கொண்டிருந்தது. அப்பொழுது அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் வீட்டைவிட்டு வெளியேறி, மஸ்ஜிதுந் நபவீக்கு வந்தார்கள். அஃதே சமயத்தில் அங்கு உமர் (ரலி) அவர்களும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள், அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்து, ''கடுமையான வெய்யில் நேரத்தில் அங்கு வரக் காரணம் என்ன?'' என்று கேட்டனர். ''தாங்க முடியாத பசியின் காரணமாக'' என்று அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்டு உமர் (ரலி) அவர்கள் ''அல்லாஹ் மீது ஆணையாக நானும் அதே காரணத்தினால் தான் வீட்டை விட்டு வெளியே வந்தேன்'' என்று கூறினர்.

இவ்விதம் இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது, அங்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வந்து, ''இந்தக் கடும் வெய்யிலில் இருவரும் எங்கே வந்தீர்கள்? என்று கேட்டார்கள். ''பசியின் காரணமாக வந்தோம்'' என்று அவர்கள் இருவரும் பதில் கூற, ''அதே பசியின் நிர்ப்பந்தத்தின் காரணத்தால் தான் நானும் வெளியே வந்தேன்'' என்றார்கள் அவர்கள். இவ்வித நிலைகளில் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து, அபூபக்ர் (ரலி) அவர்கள், அபூஅய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் வீட்டிற்கோ, அபுல் ஹைதம் இப்னு தைஹான் (ரலி) அவர்கள் இல்லத்திற்கோ சென்று உணவு கேட்டு உண்டதுண்டு.

இப்படி அடிக்கடி பட்டினி கிடக்க நேர்ந்தாலும், நேரான முறையில் ஈட்டப்பட்ட உணவையே அருந்த வேண்டும் என்பதில் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதிக அக்கறையுள்ளவர்களாய் இருந்தனர். அவர்களின் ஊழியர் ஒருவர், ஒரு நாள் அவர்களுக்குப் பாத்திரம் ஒன்றில் பால் கொண்டு வந்து கொடுத்தார். அதனை வாங்கி அவர்கள் அருந்தி முடித்ததும், அந்த ஊழியர் கேட்டார்,''நான் எதைக் கொண்டு வந்து கொடுத்தாலும், அதைப் பற்றி விசாரணை செய்வீர்களே; இந்தப் பாலைப் பற்றி மட்டும் ஏன் அப்படிக் கேட்கவில்லை?'' என்று. உடனே அவர்கள் ''என் பசியின் மிகுதியால் உம்மிடம் அதைப்பற்றி எதுவும் கேட்காமல் அருந்தி விட்டேன். அந்தப்பால் உமக்கு எப்படிக் கிடைத்தது?'' என்று கேட்டார்கள். ''அறியாமைக் காலத்தில் ஒரு சமூகத்தாருக்கு ஆரூடம் பார்த்துச் சொன்னேன். அதற்காக அவர்கள் கொடுத்தார்கள்'' என்று அவர் கூறியதுதான் தாமதம், அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் வாய்க்குள் விரலை விட்டு, அருந்திய பாலை வாந்தி எடுக்க முயன்றார்கள். அந்த முயற்சியில் அவர்களின் உயிரே போய் விடும் போலிருந்தது. இதனை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிந்ததும், அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைச் சந்தித்து,''அல்லாஹ் உமக்கு அருள் புரிவானாக! உம்மைக் குறித்து அல்லாஹ் ஓர் ஆயத்தை அருளியுள்ளான்'' என்றனர். அதில் அவன், ''இன்னும் தன் இறைவனிடத்தில் நிற்பதைப் பயந்தவருக்கு இரண்டு சோலைகள் இருக்கின்றன'' *(55:46)* எனக் குறிப்பிட்டான். பாவம் செய்யும் போதோ, அதற்குப் பிறகோ அல்லாஹ்வை நினைந்து அஞ்சியவருக்கு ஈடேற்றம் உண்டு என்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துவதாகக் கூறப்படுகிறது

இன்னொரு சமயம் அவர்கள் தம் அடிமை கொண்டு வந்து கொடுத்த உணவில் ஒரு பிடியை எடுத்து உண்டார்கள்.அது ஹராமான உணவு என அறிந்ததும், அவர்கள் துடி துடித்துப் போய் விட்டார்கள். ''என்னை நீ கொன்றிருக்கக் கூடாதா?'' என அவர்கள் ஆத்திரத்துடன் கேட்டு விட்டு, அதனை வாந்தி எடுக்க முயன்றார்கள். தண்ணீரைக் குடித்து வாந்தி எடுத்தால் அது வந்துவிடும் எனக் கூறப்பட்டதும், அவ்விதம் அவர்கள் தண்ணீர் வாங்கி அருந்தி வாந்தி எடுக்க முயன்றார்கள். ''அல்லாஹ் உங்கள் மீது அருள்பாலிப்பானாக! உண்ட அந்த உணவைக் கக்க இப்படிக் கஷ்டப்பட்டு விட்டீர்களே'' என்று ஒருவர் கூறிய பொழுது,''என் உயிரோடு தான் அது வெளியேறும் என்றிருந்தாலும் கூட அதனை வெளியேற்றியே தீருவேன். 'ஹராம் என விலக்கப்பட்ட ஒரு பொருளை உண்டு உடல் வளர்வதைக்

காட்டிலும், நெருப்பைத் தின்பது நல்லதாகும்' என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறியிருக்கின்றனர். எனவே என் உடலின் எந்தப் பகுதியும் அந்த விலக்கப்பட்ட உணவால் வளர்ந்து விடக் கூடாது என அஞ்சுகிறேன்'' என்று அவர்கள் கூறினார்கள். இயன்ற மட்டும் அதனை வாந்தி எடுத்து விட்டு அவர்கள் சொன்னார்கள், ''இறைவனே! என்னால் முடிந்தது இவ்வளவுதான். வாந்தியாகாமல் என் உடலில் தங்கிவிட்ட உணவின் தீமையிலிருந்து உன்னிடம் அடைக்கலம் தேடுகிறேன். நரம்புகளில் தங்கிவிட்ட பகுதிக்கும் நீயே போதுமானவன்'' என்று. இந்த விஷயத்தை அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் அறிவித்தபோது, அவர்களின் முகம் மலர்ந்தது. அவர்களின் நா மொழிந்தது, ''உங்களுக்குத் தெரியாதா? சித்திக் இருக்கிறாரே அவர் வயிற்றுக்குள் நல்லதைத் தவிர்த்து, வேறு எதுவும் செல்லாது. அதற்கு அவர் அனுமதிக்கமாட்டார்'' என்று.

அவர்களின் உள்ளம், உடை, உணவில் இருந்த எளிமை, இல்லத்திலும் இருக்கத் தவறவில்லை, கலீபாவாகி ஆறு மாதங்கள் ஆன பிறகும் கூட, அவர்கள் மதீனாவிலிருந்த வீட்டிற்கு வரவில்லை. சுன்ஹில் இருந்த எளிய இல்லமே தமக்குப் போதுமானது என்று தான் அவர்கள் இருந்தார்கள். அந்த இல்லம் படுதாக்களால் ஆனதாகும். கடமைகள் அதிகரித்த போது தான், அவர்கள் சுன்ஹில் இருப்பதை விட, மதீனாவில் இருப்பது உகந்தது எனத் தீர்மானித்தனர். சுன்ஹில் தங்கியிருக்கும் போது, அவர்கள் இஷாத் தொழுகைகளுக்குப் பின் அங்கு சென்று தங்கியிருந்து விட்டு, இளங்காலையில் எழுந்து மதீனா வந்து விடுவார்கள். வெள்ளிக்கிழமை மட்டும் அவர்கள் தம் தாடிக்கு மருதாணியிட்டு, குளித்து, புதிய ஆடை அணிந்து ஜுமுஆத் தொழுகை நடத்த வருவார்கள். சுன்ஹுவுக்கும் மதீனாவுக்கும் இடையே இருந்த தொலையைப் பெரும்பாலும் அவர்கள் நடந்தே தான் கடப்பார்கள்.

தம் வேலைகளை அவர்கள் தாமே செய்துகொள்வார்கள். கலீபாவாக ஆன பிறகும், அவர்கள் தம் ஆடுகளைத் தாமே மேய்ப்பதற்கு அழைத்துச் செல்வதுண்டு. தமக்குப் பிறர் உதவ முன் வந்தால், அதனை அவர்கள் ஏற்கமாட்டார்கள். ஒட்டகையில் சவாரி செய்யும் போது, மூக்கணாங்கயிறு கீழே விழுந்து விட்டால், ஒட்டகையை உட்காரச் செய்து தான் அதை எடுப்பார்கள். இதைப் பார்க்கும் மக்கள்,''எங்களுக்கு உத்தரவிட்டால், நாங்கள் எடுத்துத் தந்திருப்போமே'' என்று கூறினால்,''என் அன்பிற்குரிய ஹபீப், 'மனிதர்

களிடமிருந்து எதனையும் இரக்க வேண்டாம்' எனக் கூறியிருக் கின்றனர்'' என்பார்கள்.

நாவடக்கம்

இந்த அடக்கம் அவர்களின் குரலிலும் இருந்தது. இனிமையும், மென்மையும் பொருந்திய குரலைப் பெற்றிருந்தார்கள் அவர்கள். அது, கேட்போர் மனம் ஈர்க்கக் கூடியதாக இருந்தது. அறியாமைக் காலத்தில் குறைஷிகள் அதிகம் பயந்தது அவர்களின் குரலுக்குத்தான். அதனால் தான் குறைஷிகள், அவர்கள் தம் குரலை உயர்த்தி குர்ஆனை ஓதக்கூடாது என்றனர். குரலில் இருக்கும் இனிமையும், மென்மையும் பெரும்பாலாருக்குக் குரல் வளையுடன் நின்றுவிடும். ஆனால் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அவை, இதயத்திலும் இறங்கியிருந்தன. அவர்களின் பேச்சில் இனிமை ததும்பும், பக்தி பிரவகிக்கும். ஆர்வம் துளும்பும், அறிவு அதிகமாயிருக்கும். அவர்களின் சொற்றொடர் களைப் பொறுக்கு மணிகள் பொருத்தப்பட்ட அணிகலனுக்கு இணையாகக் கூறலாம். அவர்களின் சொற்பொழிவுகள் பேழை யிலிருந்து மணி உதிர்வதை ஒத்திருக்கும். கருத்தற்ற சொற்களையோ, பிறர் மனத்தை வருத்தும் வார்த்தைகளையோ அவர்களின் நாவு உதிர்த்ததில்லை. இறைவனின் பெயரை உச்சரிக்கும்போது, அவர்களுக்கு ஆவேசம் பிறக்கும். அது கேட்போர் மனத்தில் இறை யச்சத்தைப் பெருக்கும்.

இத்தகைய ஆற்றல் தம் நாவிற்கு இருந்ததால், அது பாதகமாய்ப் பயன்பட்டுவிடக் கூடாதென்பதில் அவர்கள் அதிகம் எச்சரிக்கை யுள்ளவர்களாய் இருந்தனர். அவர்கள் அவசியம் ஏற்படும்போது தான் பேசுவார்கள். அநாவசியப் பேச்சுப் பேசாதிருக்க, அவர்கள் தம் வாயில் கூழாங்கற்களைப் போட்டுக் கொண்டிருப்பதுண்டு. அவசியம் பேச வேண்டும் என உணரும்போது, அவர்கள் தம் வாயிலிருக்கும் கூழாங்கற்களைக் கீழே துப்பிவிடுவார்கள். முஸ்லிம்களில் அதிக நாவன்மை அமைந்திருந்தவர்கள் இருவர் . அவர்களில் ஒருவர் இவர்கள். மற்றொருவர் அலீ (ரலி) அவர்கள்.

நாவன்மைக்கு நகைச்சுவை, உணவில் உப்பின் அளவு இருப்பது அவசியம். அந்த இலக்கணத்திற்கு ஏற்றதாகவே அபூபக்ர் (ரலி) அவர்களின் பேச்சு இருந்தது. அண்ணலின் தோழர் ஒருவர் அவர் களிடம் வந்து, ''போரில் என் புரவி முன்னேயே போக மாட்டேன் என்கிறது, பின்னேயும் போக மாட்டேன் என்கிறது'' என்று கூறினார்.

''உம் குதிரை முனாபிக்கா (நயவஞ்சகனா)க இல்லை என்று கூறும்! முனாபிக் தான் முன்னேயும் போவான், பின்னேயும் போவான். ஒரே இடத்தில் நிற்க மாட்டான்'' என்றார்கள் அபூபக்ர் (ரலி) அவர்கள்.

அண்ணலின் இன்னொரு தோழர் ஒரு நாள், அவர்களிடம் வந்து, ''கிழவர் யார்?'' என்று கேட்டார். ''எவன் போர்க்களத்தில் தோற்று விடுவோமோ என எண்ணுகிறானோ, அவன் தான் கிழவன்'' என்றார்கள் அவர்கள். அதற்கு அவர் ஏதோ கூறினார். ''இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களை ஏற்றுக் கொள்பவரில் கிழவர்களும், இளைஞராகி விடுகின்றனர்'' என்றார்கள் அவர்கள். ''அவ்வாறாயின் நம்மில் யாரும் கிழவர் இல்லையா?'' என்று அவர் கேட்ட போது, இள நகையுடன் அபூபக்ர் (ரலி) அவர்கள், ''இல்லை, நம்மில் அபூபக்ரும் கிழவராக இல்லை'' என பதிலிறுத்தனர்.

ஒருநாள் அவர்கள் தம் நாவைப் பிடித்து இழுத்துத் தேய்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட உமர் (ரலி) அவர்கள், ''என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டனர். அதற்கு அவர்கள், ''இந்த நாவு பல காரியங்களில் என்னை வீழ்த்தியிருக்கிறது'' என்று பதிலிறுத் தனர். அவர்கள் தங்களின் நாவைப் பிடித்துக் கொண்டு, ''உன்னுடைய தகாத சொல்லின் காரணமாகத்தான், நாங்கள் அழிவில் விழுந்து விடுகிறோம்'' என்று கூறுவதும் வழக்கம். அது உண்மை தான் என்பதை இந்தச் சம்பவம் உணர்த்துகிறது. ஒரு நாள் பனீ தமீம் கோத்திரத்தைச் சேர்ந்த அகர் இப்னு ஹாபீஸ் என்பவர் அண்ணல் நபி (ஸல) அவர்களின் சமூகம் வந்தார். அப்பொழுது அங்கிருந்த அபூபக்ர் (ரலி) அவர்கள், ''அவரை பனீ தமீம்களின் தலைவராக்கலாம்'' என்று கூறினர். அதைக் கேட்ட உமர் (ரலி) அவர்கள், ''அவர் வேண்டாம், கைன்கா இப்னு மஃபத் இருக்கிறார்'' என்றார்கள். இது அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி விட்டது. ''எனக்கு எதிர்ப்பாகச் செய்ய வேண்டும் என்பது தான் உம் விருப்பம்'' என்று அவர்கள் சற்று உரத்த குரலில் கூறினார்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள் ''உங்களுக்கு எதிர்ப்பாகச் செய்யவேண்டும் என்பது என் எண்ண மல்ல'' என்று பதிலிறுத்தனர். இந்த விஷயம் தடித்த குரலில் அண் ணல் நபி (ஸல்) அவர்களின் முன்னிலையில் வைத்துத் தர்க்கிக் கப்பட்ட அடுத்த கணமே, இறைவனிடமிருந்து செய்தி வந்துவிட்டது. அதில் அவன், ''விசுவாசிகளே! நபியுடைய குரலுக்கு மேலாக உங்கள் குரலை உயர்த்தாதீர்கள்!'' என எச்சரித்தான். அதை அறிந்ததும் அபூபக்ர்

(ரலி) அவர்கள் துடி துடித்துப் போய் விட்டார்கள். ஆத்திரத்தில் புரிந்த பிழை நினைந்து அவர்கள் அதிகம் வருந்தினார்கள். இதன்பின் அவர்கள் இரகசியம் பேசும் ஒருவர் போல் அன்றி உரத்துப் பேசுவ தில்லை என்னும் உறுதியை எடுத்துக் கொண்டதுடன், அவ்விதமே நடக்கவும் ஆரம்பித்தார்கள். உமர் (ரலி) அவர்களும் அதேவித உறுதியை அக்கணமே எடுத்துக் கொண்டனர். இதன்பின் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் பேசினால், நன்றாகக் கூறுமாறு மடக்கிக் கேட்காத வரை உமர் (ரலி) அவர்களுடைய பேச்சு உரத்து இருப்பதில்லை.

இந்த உறுதியை அபூபக்ர் (ரலி) அவர்கள் எடுக்குமுன் நிகழ்ந்தது இது: ஒரு நாள் அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் அமர்ந்திருந்தனர். அப்பொழுது ஒருவன் வந்தான்; அவர்களை வாயில் வந்தபடி திட்ட ஆரம்பித்தான். அவர்களும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள். ஆனால், அவர்களால் அதிக நேரத்திற்குத் தம் நாவிற்குக் கடிவாளம் இட இயலவில்லை. அவர்களும் அவனைக் திருப்பித் திட்டத் தொடங்கினார்கள். அடுத்த கணம் அங்கிருந்து, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பொருக்கென எழுந்து நடக்கலாயினர். அது கண்டு அதிர்ந்த அவர்கள் ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பிழை ஏதும் செய்து விட்டேனா நான்?'' எனக் கேட்டனர். அதற்கு அவர்கள், ''நீர் வாய் மூடி இருந்தவரை உமக்காக ஓர் அமரர் பதில் கூறிக் கொண்டி ருந்தார். நீர் பதில் கூற ஆரம்பித்ததும், அவர் அகன்று விட்டார். அவர் இடத்திற்கு சைத்தான் வந்து விட்டான். அவனுடன் நானும் அமர்ந் திருக்க விரும்பவில்லை'' என்று பதில் கூறினர். அதைக் கேட்டதும் அபூபக்ர் (ரலி) அவர்கள், ''இனிமேல் இவ்விதம் செய்யமாட்டேன்'' என உறுதி மொழி பகர்ந்தனர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் செயலும், சொல்லும் அபூபக்ர் (ரலி) அவர்களை எப்படி மாற்றின; அண்ணல் முன் எடுத்த உறுதி மொழியை, அவர்கள் எப்படிப் போற்றினர் என்பதற்கு ஆதாரம் இந்த நிகழ்ச்சி: ஒரு நாள் அவர்களை இப்படித்தான் ஒருவன் வந்து கண்ட படி திட்டினான். அதைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்து விட்டு அவனைப் பார்த்து அவர்கள் அமைதியாகக் கூறினார்கள். ''உனக்குத் தெரியாமல் என்னிடம் மறைந்து இன்னும் பல (குறைகள்) இருக்கின்றனவே'' என்று. அவர்கள் கலீபாவாக இருந்தபோது, அவர் களைப் பார்த்து ஒருவர் திட்டினார், ''நீர் என்ன ஆட்சி நடத்துகிறீர்? உம்மிடம் எத்தனையோ குறைகள் இருக்கின்றன! அவற்றையெல்லாம்

இறைவன் மறைத்து விட்டான். இல்லையேல்...'' என்று கூறி, அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் நிறுத்தினார் அவர். அது கேட்டு அபூபக்ர் (ரலி) அவர்கள் கோபப்படவில்லை. ஏனெனில் அவர்களின் உள்ளம் தம் குற்றத்தை ஆராய ஆரம்பித்துவிட்டது. குற்றம் கூறுபவர் மீது கோபம் கொள்வதை விட, அவர் ஏற்றும் குற்றம் தம்மிடம் இருக்கிறதா எனத் துருவிப் பார்த்து, அப்படி ஏதாவது இருக்குமாயின் அதனை எடுத்து எறிவது மேல் அல்லவா என அவர்கள் கருதினர்.

உண்மையில் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம்மை அறியாமல் சிறு பிழைகள் சில சமயம் செய்துவிடுவதும் உண்டு தான். தமக்கும், இவர்களுக்கும் ஏற்பட்ட தகராறு பற்றி ரபீஆ அஸ்லமி கூறுகிறார். ''எனக்கும் அபூபக்ருக்கும் ஒரு விஷயத்தில் தகராறு ஏற்பட்டது. அவர் என்னைப் பார்த்து ஒரு கடின சொல் பயன் படுத்திவிட்டார். அதனால் என் மனம் வேதனை அடைந்தது. அதை அறிந்ததும் அவர் என்னிடம், 'நான் உம்மைத் திட்டியதற்குப் பதிலாக நீரும் என்னைத் திட்டிவிடும்!'' என்றார். அவ்விதம் செய்ய நான் மறுத்து விட்டேன். அதுகண்டு அவர், 'நீர் என்னைத் திட்டாவிடில் இதுபற்றி நான் அல்லாஹ்வின் தூதரிடம் சென்று முறையிடுவேன்' என்று கூறினார். அப்பொழுதும் நான் அவரைத் திட்டவில்லை. அவர் அங்கிருநது சென்று விட்டார். அதை அறிந்த பனீ அஸ்லம் கோத்திரத்தவர் சிலர் என்னிடம் வந்து, ''அவர், (அபூபக்ர்) உமக்கு அநியாயமும் செய்து விட்டு, அல்லாஹ்வின் தூதர் அவர்களிடம் உம்மைப் பற்றி முறையிடவும் செய்கிறாரே'' என்றனர். அப்பொழுது நான் அவ்விதம் கூறியவர்களிடம், ''அவர் அபூபக்ர் என்பதை அறியமாட்டீர்களா? அவர் மட்டும் என் மீது கோபம் கொண்டால், அல்லாஹ்வின் தூதர் அவர்களும் என் மீது கோபம் கொண்டு விடுவர். என்மீது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கோபம் கொண்டுவிடின் அல்லாஹ்வும் என் மீது கோபம் கொண்டு விடுவான். அப்பொழுது ரபீஆவாகிய நான் நாசமடைந்து விடுவேன் என்பதில் ஐயமில்ல'' என்று கூறிவிட்டு அல்லாஹ்வின் தூதர் சமூகம் சென்றேன். அவர்களிடம் எனக்கும் அபூபக்ருக்கும் இடையே நிகழ்ந்தவற்றைக் கூறினேன். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''ரபீ ஆவே! நீர் செய்வதே சரி. அவர் உம்மைத் திட்டியது போல் நீரும் அவரைத் திட்டுவது அறிவுடைமை ஆகாது. அதற்குப் பதிலாக, 'அபூபக்ரே! இறைவன் உம்மை மன்னிப்பானாக!' என்று கூறவேண்டும்'' என்றனர்.

இன்னொரு சமயம் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு பொருளைச் சபித்து விடுகின்றனர். அதைக் கேட்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''அபூபக்ரே! நீர் சித்திக்காய் இருந்து கொண்டு சபிக்கிறீரே. கஃபா வுடைய இறைவன் மீது ஆணையாக இது உமக்கு அழகல்லவே'' என்று மூன்று முறை கூறினர். இடிகள் மூன்று ஒன்றின் பின் ஒன்றாய்த் தம் நெஞ்சில் விழுந்தது போல் உணர்ந்து அபூபக்ர் (ரலி) அவர்கள், அந்தக் குற்றத்திற்கு இறைவனிடம் மன்னிப்புக் கேட்டதுடன், அதற்குக் கழுவாய் தேடுவதற்காக ஓர் அடிமையையும் விடுதலை செய்தனர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறுதி முறையாக ஹஜ்ஜு செய்யச் செல்லும் போது, அல்அர்ஜ் என்னும் இடத்தை அடைந்தனர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சாமானகள் இருந்த ஒட்டகையைக் காணவில்லை. அது எங்கேயோ ஓடிப்போய்விட்டது. இது அபூபக்ர் (ரலி) அவர்களை ஆத்திரம் கொள்ள வைத்தது. ஒட்டகை ஓட்டியை அவர்கள் கண்டித்தார்கள். அவன் போலி சமாதா னங்கள் கூறியதும், அவர்களின் ஆத்திரம் அதிகரித்தது. அவர்கள் அவனைத் தம் சாட்டையால் அடித்துவிட்டார்கள். இப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அபூபக்ர் (ரலி) அவர்களைக் கடியும் விதத்தில், ''இஹ்ராம் உடையில் இருக்கும் யாத்திரிகர் ஒருவரின் நடவடிக்கையைப் பாருங்கள்!'' என்று கூறினர்.

தம் சிறிய தாயார் புதல்வர் மிஸ்தஹ் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது கூறப்பட்ட அவதூறை உண்மை யென நம்பினார். அதற்காக, ''அவருக்கு ஒரு பொருளும் உதவியாகக் கொடுக்கமாட்டேன்'' எனப் பிரமாணம் செய்ததுடன், அவ்விதமே அவருக்கு அளித்து வந்த உதவியையும் நிறுத்தி விட்டார்கள் அபூபக்ர் (ரலி) அவர்கள். அப் பொழுது ''உங்களில் மேன்மையும், தாராளத்தன்மையும் உள்ளவர்கள் பிரமாணம் செய்ய வேண்டாம்!'' என்பது முதல், ''அல்லாஹ் உங்களை மன்னிப்பதை நீங்கள் விரும்பவில்லையா? நிச்சயமாக, அல்லாஹ் பிழை பொறுப்பவனாயும், கிருபை செய்கிறவனாயும் இருக்கிறான்'' என்பது வரையுள்ள இறைவசனம் இறங்கியது. அதில், ''தீமை செய்தவனுக்கு உதவி செய்யமாட்டோம் என நீங்கள் ஆணையிட்டுச் சொல்லவேண்டாம்'' என்றும், ''அல்லாஹ் உங்களை மன்னிப்பதை நீங்கள் விரும்பவில்லையா?'' என்றும் இறைவன் எச்சரித்தான். அதை அறிந்ததும் அபூபக்ர் (ரலி) அவர்கள், ''அல்லாஹ்வின் மீது ஆணையாக அதனை நான் விரும்புகிறேன்'' எனக் கூறியதுடன், தம் உறவினருக்குக் கொடுத்து வந்த உதவியை இரட்டிப்பாக்கினார்கள். ''இதனை இனி நான் குறைக்கவே மாட்டேன்'' என்றும் கூறி னார்கள்.

எவ்வளவோ எச்சரிக்கையாய் இருந்தும் அவர்களின் நாவு அவர்களைப் பலமுறை மோசம் செய்திருக்கிறது என்பதையும், ஒவ்வொரு முறையும் அதற்குத் தண்டனை அளித்து, அதிலிருந்து மீள அவர்கள் முயன்றிருக்கிறார்கள் என்பதையும், இந்தச் சம்பவங்கள் உணர்த்துகின்றன. ஆனால், அவர்களின் நாவு பொய் சொன்னதில்லை. அறியாமைக் காலத்திலும் கூட அது அந்தத் தவறைச் செய்ததில்லை. அவர்கள் மக்களைப் பார்த்துக் கூறுவது வழக்கம். ''பொய்யுரைக் காதீர்கள்! எச்சரிக்கிறேன். பெரும் பாவமும் அதுவும் ஒன்றுதான்'' என்று பிறரை இகழும் பிழையையும், அவர்களின் நாவு அறியாமைக் காலத்திலும், இஸ்லாத்திற்கு வந்த பிறகும் புரிந்ததில்லை. அவர்கள் அடிக்கடி கூறுவார்கள், ''முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் இகழ்ந்து கொள்ளக் கூடாது. ஏனெனில், அற்பமானவராகக் கருதப்படும் ஒருவர் கூட, இறைவன் முன்னிலையில் உயர்ந்தவராக இருக்கக் கூடும்'' என்று.

இறையன்பு

பிறர் இகழப்படுவதை, அதிலும் இறைவன் இகழப் படுவதை அவர்களால் பொறுத்துக் கொள்ள இயலுவதில்லை. ஒரு நாள் அவர்கள் மதீனாவின் யூதக்கிளையினரான பனூகைனுகாக்கள் வாழ்ந்த இடத்திற்குச் சென்று, அவர்களிடம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கொடுத்த கடிதத்தைக் கொடுத்து, இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூறினர். ''அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! இஸ்லாத்தைத் தழுவுங்கள்! முகம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவர் என, நீங்கள் நிச்சயமாக அறிந்திருக்கிறீர்கள். அவர்கள் அல்லாஹ் விடமிருந்து உங்களிடம் வந்திருக்கிறார்கள். உங்களிடம் உள்ள தவ்ராத்தில் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைத் தெரிந்திருக் கிறீர்கள். எனவே நீங்கள் அல்லாஹ்வை விசுவாசித்து, அவன் தூதரை உண்மைப்படுத்தி, அவனுக்கு அழகிய முறையில் கடன் கொடுப் பீர்களாக! அவன் உங்களைச் சுவனத்தில் நுழைய வைப்பான்; உங்களுக்கு நன்மையையும் இரட்டிப்பாக்குவேன்'' என்றதும், அங்கிருந்த பன்காஸ் என்னும் யூதன், ''அபூபக்ரே! நம்முடைய ரப்பு நம்முடைய பொருள்களைக் கடன் கேட்கிறான் என்று நினைக்கிறீரா?

அவ்விதமாயின் அல்லாஹ் ஏழையாகவும் நாம் தாம் செல்வர்களாயும் இருக்கிறோம். ஏழை தான் செல்வனிடம் கடன் கேட்பான்'' என்றான். இது அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அடங்காச் சினத்தை உண்டு பண்ணியது? அவர்கள் அவனை அறைந்து விட்டார்கள். ''உங்களுக்கும், எங்களுக்கும் உடன் படிக்கை மட்டும் இல்லாதிருந்தால் உன் தலையைத் துண்டித்திருப்பேன்'' என்றும் கூறினார்கள்.

அறைபட்ட பன்காஸ் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ''அபூபக்ர் என்னை அடித்துவிட்டார்'' என்றான். தான் அல்லாஹ்வைக் குறித்து அவ்வாறு கூறவே இல்லை என்றும் சாதித்தான். வானிலுள்ள இறைவன் வாய் பொத்தி இருக்கிறான் என்னும் தைரியத்தில் தான், உலகில் உள்ள பலர் பொய்புகலப் பயப்படுவதில்லை. ஆனால் அல்லாஹ் இப்பொழுது வாயைத் திறந்தான். அபூபக்ர் (ரலி) அவர்களின்உதவிக்கு வந்தான்; அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறியதை உண்மைப்படுத்தினான். ''நிச்சயமாக அல்லாஹ் ஏழை நாங்கள் தான் சீமான்கள் என்று எவர்கள் கூறினார்களோ, அவர்களின் சொல்லை நிச்சயமாக அல்லாஹ் கேட்டுக் கொண்டான்'' என்னும் வசனத்தை அவன் வெளிப்படுத்தினான் *(3 :181)*

இஸ்லாத்திற்காக அபூபக்ர் (ரலி) அவர்கள் எத்தகைய அர்ப் பணத்தையும் செய்ய ஆயத்தமாகயிருந்தார்கள். அவர்களுக்கு இளமையிலிருந்தே அபுல் அஸத் என்னும் நண்பர் ஒருவர் இருந்து வந்தார். அவர், அவர்கள் இஸ்லாத்திற்காகத் தாம் ஈட்டிய பொருளை வாரிச் செலவிடுவது கண்டு வருந்தி, ''நீர் மிகவும் எச்சிரிக்கையானவர், வாணிபத்தில் நன்கு தெளிந்தவர். நீர் ஒரு போதும் இழப் படைந்ததில்லை. ஆனால், இப்பொழுது உமக்கு ஏதோ அறிவீனம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் நீர் கைப் பொருளையெல்லாம் காலி செய்துவிட்டு, ஒரு தனி மனிதரை விசுவாசித்துக் கொண்டிருக்கிறீர். உம்முடைய பூர்வீக மார்க்கத்தை விட்டும் விலகியிருக்கிறீர். இதனால் நீர் இழப்பிற்குள்ளாகிவிட்டீர்'' என்று கூறினார். அந்த ஆலோசனையில் ஒரு பொட்டுக் கூடப் பொருட்படுத்தத் தக்கதல்ல என உதறித் தள்ளினார்கள் அபூபக்ர் (ரலி) அவர்கள்.

அற்பப் பொருளை மட்டும் அல்ல, அருமையுடன் பெற்று, பெருமையுடன் பேணி வளர்த்த திருமகனையே இஸ்லாத்திற்காகத் தீர்த்துக் கட்டத் துணிந்தவர்கள் அல்லவா அவர்கள்? அவர்களின் புதல்வர் அப்துர் ரஹ்மான் (ரலி) இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டபின்,

ஒரு நாள் தந்தையாருடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது கூறினர், ''தந்தையே! பத்ர் போரின் போது உங்களை வெட்டி வீழ்த்த அருமையான வாய்ப்பு ஒன்று எனக்குக் கிடைத்தது. ஆனால், நான் அதனைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை'' என்று அதைக் கூறி அவர்கள் வாய் மூடுமுன், ''அவ்விதச் சந்தர்ப்பம் மட்டும் எனக்குக் கிடைத்திருப்பின் உன்னை நான் விட்டிருக்க மாட்டேன்'' என்றார்கள் அபூபக்ர் (ரலி) அவர்கள்.

இறை தூதர் மீது அன்பு

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது அபூபக்ர் (ரலி) அவர் களுக்கு அளவற்ற அன்பு இருந்தது. அதனால் அவர்கள் அண்ணல் மனத்தை மகிழ்விப்பதில் அக்கறை உள்ளவர்களாய் இருந்தனர். ஒரு நாள் அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் அமர்ந்திருந் தனர். அலீ (ரலி) அவர்கள் வருவதைக் கண்டதும், அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு வலப்புறமாக அமர்ந்திருந்த அபூபக்ர் (ரலி) அவர்கள், தாம் நகர்ந்து கொண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும் தமக்கும் இடையில் அலீ (ரலி) அவர்கள் அமர இடம் அளித்தனர். அலீ (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தவர். ஆதலால் அவர்களைக் கண்ணியப்படுத்துவது அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு மகிழ்வளிக்கும் என எண்ணியே இவ்விதம் செய்தனர். அவர்கள் எதிர்பார்த்தபடியே அவர்களின் தகைமை கண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அதிகம் மகிழ்ந்தனர். ''அஹ்லுல் பள்லுக்கு இருக்கிற பள்ளை, அஹ்லுல் பள்ளைத் தவிர வேறு யாரும் அறிய மாட்டார்கள்'' என்றும் கூறினர். அஹ்லுல் பள்லு என்பதன் பொருள், ''சன்மார்க்கத்தின் கண்ணியவான்'' என்பதாகும்.

மக்காவில் இருக்கும் போது அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் அபூபக்ர் (ரலி) அவர்கள் சில சமயம் இரவு முழுதும் கூடப் பேசிக் கொண்டு இருப்பதுண்டு. மதீனா வந்தபிறகு, அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிற்கு இஷாத் தொழுகைக்குப் பின் வந்து முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவது வழக்கம். இப்படி ஒருவரை விட்டு ஒருவர் அதிக நேரம் பிரிந்து இராவிட்டாலும், அபூபக்ர் (ரலி) அவர்கள் சிலசமயம் இரவில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வீட்டு வாயிலில் வந்து படுத்துக் கொள்வார்கள். எவராவது இதைப் பார்த்து, ''உங்களுக்கு வீடு வாசல் கிடையாதா?'' என்று கேட்டால் ''எனக்கு வீடு

வாசல்களெல்லாம் இருக்கவே செய்கின்றன. விடிந்ததும் அல்லாஹ்வின் தூதர் முகம் பார்க்க வேண்டும் என்னும் ஆவலில் இங்குப் படுத்திருக்கிறேன்'' என்று அவர்கள் கூறுவார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களும் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது அளவற்ற அன்பு வைத்திருந்தனர். இறைவன் மீது வைத்திருந்த அன்பிற்கு அடுத்தபடியாக ஒருவர் மீது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அன்பு வைத்திருந்தனர் என்றால், அது அபூபக்ர் (ரலி) அவர்கள் மீதுதான். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் ஒரு குளத்தில் நீந்துவது வழக்கம். ஒரு நாள் அவர்கள் தம் தோழர்களைப் பார்த்து, 'நீங்கள் நீந்திச் சென்று உங்களின் தோழர்களைப் பிடித்துக் கொள்ளுங்கள்!'' என்றனர். அவ்விதமே பலரும் தம் மனத்திற்கு இயைந்த தோழர்களைப் பிடித்துக் கொண்டு, இரண்டு, இரண்டு பேராக இணைந்து நீந்தினர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அபூபக்ர் (ரலி) அவர்கள் பக்கம் நீந்தி வந்து, அவர்களின் கழுத்தை கட்டிக்கொண்டு, ''நானும் என் தோழரும், நானும் என் தோழரும்'' என்று கூறினார்கள்.

ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மக்களைப் பார்த்துக் கூறினர்: ''நான் சொன்னேனே மக்களே! ஐயமின்றி நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட தூதனாவேன் என்று, 'நீர் பொய் சொல்கிறீர்' என்று சொன்னீர்கள். ஆனால் அபூபக்ரே, 'நீங்கள் உண்மையைச் சொல்கிறீர்கள்'' என்றனர்.

இன்னொரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்துப் பகர்ந்தனர். ''நீர் இம்மையிலும் மறுமையிலும் (எனக்குத்) தோழராய் இருப்பீர்.'' இதைக் கேட்டதும் அபூபக்ர் (ரலி) அவர்கள் அளவிறந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். அந்த மகிழ்ச்சியில் அவர்கள் பூமியில் விழுகிற வரைக்கும் குதித்தனர் என்றும், பூமியில் விழுகிற வரைக்கும் அசைந்தாடிக் குதித்தனர் என்றும் கூறப்படுகிறது.*

மற்றொரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்துப் புகன்றனர். ''என்னுடன் சேர்ந்து சுவர்க்கம் புகுபவர்களில் முதலாமவராக நீர் இல்லையா? (தவ்ர்) குகையில் என்

* இதை வைத்துத்தான் ஷாதுலியா தரீக்காவைச் சேர்ந்தவர்கள் திக்ரு செய்யும்போது, அசைந்தாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர் என்று சொல்லப்படுகிறது.

தோழராய் இருந்தது போலவே, ஹவ்லுல் கவ்தரிலும் நீர் என் தோழராய் இருப்பீர்.'' இதைக் கேட்டதும் அவர்கள் அளவற்ற ஆனந்தம் அடைந்தார்கள்.

இன்னொரு நாள் இரவு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் அருமை மனைவி ஆயிஷா (ரலி) அவர்களுடன் அமர்ந்திருந்தனர். அப்பொழுது கரும்பட்டில் வைத்துத் தைக்கப்பட்ட வைரக் கற்களைப் போல் இருள் வானில் கணக்கற்ற விண்மீன்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. அநாதி காலமாய்க் கவிஞர்களின் கற்பனைக்கு வேலை வைத்துக் கொண்டிருந்த அக் கவினுறு காட்சி, அன்று ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிற்கு வேலை வைத்தது. விண் விதானப் பரப்பில் விரவிக் கிடந்த விண்மீன்களைப் பார்த்து, ''இந்த விண்மீன்களின் எண்ணிக்கை அளவு நன்மை செய்தவர் (எவரும்) உண்டா ?'' என ஆயிஷா (ரலி) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். உண்மையில் இது சங்கடமான கேள்விதான். ஆயினும், அது அண்ணல் நபி (ஸல்) அவாகளுக்கு அங்ஙனம் இருக்கவில்லை. ''ஆம்'' என்றார்கள் அவர்கள். அதைக் காதுற்றதும் ஆயிஷா (ரலி) அவர்கள் ''அவர் யார்?'' என்று கேட்டார்கள். ''உமர்'' என்றார்கள் உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்கள். இந்தப் பதில் அதிரவைத்தது ஆயிஷா (ரலி) அவர்களை. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் தந்தையைக் குறிப்பிடாது ''உமர்'' என்று கூறியது தான் ஆயிஷா (ரலி) அவர்களின் அதிர்ச்சிக்குக் காரணமாகும். அவர்களால் தம் வருத்தத்தை வெளிப்படுத்தாது இருக்க இயலவில்லை. ''என் தந்தையார் அப்படி நன்மை செய்யவில்லையா?'' என்று ஆயிஷா (ரலி) அவர்கள் வருத்தத்துடன் வினவினார்கள். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அளித்த பதில் அவர்களை முன்னினும் அயரவைத்தது. அப்படி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அளித்த பதில் என்ன? ''உம் தந்தையின் ஒரு நன்மையில் உமரின் இத்தனை நன்மைகளும் அடங்கும்.''

மற்றொரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் அமர்ந்திருந்தனர். அப்பொழுது அவர்கள், ''இந்த உம்மத்தில் தம் வலக்கையில், தம் புத்தகம் கொடுக்கப் படுபவர்களில் முதலாமவராக உமர் இப்னு கத்தாப் இருப்பார். அவருக்குக் கதிரவனின் காந்தியைப் போல் சுடர் இருக்கும்'' என்று கூறினர். முன் சம்பவத்தில் ஆயிஷா (ரலி) அவர்களை அதிர்ச்சி அடைய வைத்ததைப் போலவே, தோழர்களை அதிர்ச்சி அடையவைத்தது இது. அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து ''அபூபக்ர் எங்கே?'' என்று கேட்

டனர். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அளித்த பதில், அவர்களின் அதிர்ச்சியை அகல வைத்தது. அப்படி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கொடுத்த பதில் என்ன? ''அவரை அமரர்கள் வெகு தொலை சுவர்க்கத்தின் பக்கம் அழைத்துச் சென்றுவிடுவர்.''

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் அன்பு மனைவி ஆயிஷா (ரலி) அவர்களைப் பாராட்டப் புகன்ற ஒரே சொற்றொடர் ''அவர் அபூபக்ரின் புதல்வி'' என்பதாகும். அதில் ஆயிஷா (ரலி) அவர்கள் மட்டுமல்ல, அபூபக்ர் (ரலி) அவர் களும் பாராட்டப்படுகின்றனர். ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஜைனபு (ரலி) அவர்கள் வந்து, ''தங்களின் மனைவிமார்கள் அபூகுஹாஃபாவின் புதல்வி* விஷயத்தில் தாங்கள் நியாயமாக நடந்து கொள்ளவேண்டும் என்று அல்லாஹ்வை வஸீலாக வைத்துத் தங்களை வேண்டிக் கொள் கின்றனர்.'' என்று சற்று சப்தமிட்டுக் கூறினர். அங்கு ஆயிஷா (ரலி) அவர்களும் இருந்தனர். அவர்களின் அருகில் வந்து அவர்களை ஜைனபு (ரலி) அவர்கள் திட்டினர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள், இதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள் என்ன பதில் கூறுகிறார் என்று பார்த்துக் கொண்டி ருந்தார்கள். ஆயிஷா (ரலி) அவர்கள் அப்பொழுது ஜைனபு (ரலி) அவர்களுக்குப் பதில் கூறி, அவர்களை அடக்கி விட்டனர். அது கண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ஆயிஷா (ரலி) அவர்களைப் பார்த்து, ''அபூபக்ரின் புதல்வி அல்லவா?'' என்றார்கள்.

இவ்விதம் அபூபக்ர் (ரலி) அவர்களைத் தாமும் புகழ்ந்ததுடன், பிறர் அவர்களைப் புகழ்வதைப் பார்த்து மகிழவும் செய்தார்கள். அண் ணல் நபி (ஸல்) அவர்கள், ஒரு நாள் அவர்கள், ஹஸ்ஸான் இப்னு தாபித் (ரலி) அவர்களைப் பார்த்து, ''நீர் அபூபக்ரைப் புகழ்ந்து ஏதாவது எழுதியுள்ளீரா?'' என்று கேட்டனர். ''ஆம்'' என்று ஹஸ்ஸான் இப்னு தாபித் (ரலி) அவர்கள் சொன்னதும், அதனைச் சொல்லும்படியும், அதனைத் தாம் கேட்பதாயும் அவர்கள் கூறினர். ஹஸ்ஸான் இப்னு தாபித் (ரலி) அவர்கள் பின்வரும் பொருள் பொதிந்த பா ஒன்றைப் பாடினார்கள்.

''குன்றம் ஏறிப் பாதகர் அல்லாஹ்வின் தூதர் அவர்களைத் தேடி அலைந்தபோது, அமைதி குறைந்த அந்தக் குகையில் இருந்த இருவரில் இரண்டாமவர் யாரோ?

---

* பெயரன், பெயர்த்தியை மகன், மகள் என்று குறிப்பிடுவது அரபிகளின் வழக்கம். ஆயிஷா (ரலி) அவர்கள் அபூகுஹாஃபாவின் பெயர்த்தி.

''அல்லாஹ்வின் தூதருடைய தோழர் அவர் தாம். அந்த முறையில் அவருக்கு நிகராய் மக்களில் எவரும் இரார் என்பதை அறியாதோர் யாரோ?''

அழகு அரபியில் இருந்த இந்தப் பாகுப்பாடலை இயற்றியவரே, இசைத்ததைக் கேட்டதும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முத்தைப் பழிக்கும் தம்முன் பற்கள் தெரியச் சிரித்தார்கள். ''நீர் உண்மையே கூறினீர். ஹஸ்ஸானே! நீர் கூறியது போலவே அவர் இருக்கிறார்.'' என்று தம் மனத்தை விரித்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களை இவ்விதம் நேசிக்க எத்தனையோ காரணங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று இது. அவர்கள் தாம் செய்த விண் பயணத்தைச் சொன்னதும், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் சிலர் கூட அவர்களின் தூதுத் துவத்தில் நம்பிக்கை இழந்தனர். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத குறைஷிகளில் பலர் கை கொட்டி நகைத்தனர். அகப்பட்டுக் கொண்டார் முகம்மது' என்னும் ஆனந்தக் கூத்து அனந்தம் அவர்களின் அகத்தில், அகப்பட்டுக் கொள்வார் அபூபக்ரும்!' எனக் குதித்துக் கொண்டு அவர்கள் நேரே அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். ''உம் நண்பர் சொல்வதைக் கவனித்தீரா? நேற்றிரவு அவர் பைத்துல் முகத்தஸ் சென்று அர்ஷையும் அடைந்து, அல்லாஹ்வுடன் பேசிவிட்டு விடிவதற்கு முன் திரும்பி வந்து விட்டாராமே?'' எனத் தம் மொழிகளில் ஏளனம் வழிய எகத்தாளமாகக் கேட்டனர். அதைக் கேட்டு அபூபக்ர் (ரலி) அவர்கள் அமைதியாக, ''அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அவ்விதம் கூறியிருப்பார்களேயானால், அதனை நான் நம்புவேன்'' என்றார்கள். ''இதனைக் கொண்டும் நீர் அவரை விசுவாசிக்கிறீரா? மக்காவுக்கும், பைத்துல்முகத்தஸிற்கும் இடையே இருக்கும் அந்த நெடுந்தொலைவுக்கு ஒரே இரவில் ஒருவர் போய்த் திரும்ப முடியுமா? எனக் குறைஷிகள் கேட்டபோது, அபூபக்ர் (ரலி) அவர்கள் இன்னும் அமைதியாக, அது என்ன பெரிது? அதைவிட எத்தனையோ மடங்குத் தொலைவில் உள்ள வானத்திலிருந்து காலையிலும், மாலையிலும் 'வஹீ' தமக்கு வந்து கொண்டிருக்கிறது என்று அவர்கள் கூறுவதையே நான் நம்புகிறேனே. இதை நம்பாமல் இருப்பேனா?'' என உறுதியாக உரைத்தனர்.

இந் நிகழ்ச்சிக்குப் பின் ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹத்தீம் என்னும் இடத்தில் இருந்து கொண்டிருந்தனர். அப்பொழுது

குறைஷிகள் சிலர் அங்கு வந்து அவர்களிடம் பைத்துல் முகத்தஸ் பற்றிக் கேள்விகள் பல கேட்டனர். இதற்கு முன் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பைத்துல் முகத்தஸ் சென்றவர்கள் அல்லர். மிஃராஜ் இரவில் தான் அதனை அவர்கள் பார்த்தார்கள். அரைக்கணப் பொழுதில் நிகழ்ந்த அவ்வற்புதப் பயணத்தின் போது, அதனை அவர்கள் கவனித்துப் பார்க்க வெல்லாம் காலம் இருக்கவில்லை. அதனால் அவர்களுக்குக் குறைஷிகளின் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதில் சிறிது சிரமம் ஏற்பட்டுவிட்டது. அவர்களின் கண்முன் பைத்துல் முகத்தஸின் உருவம் காட்டப்பட்டது. அதைப் பார்த்துக் கொண்டே அவர்கள் குறைஷிகளின் கேள்விகளுக்குக் குறையில்லாமல் பதில் கூறிக்கொண்டே வந்தார்கள்.

அப்பொழுது அங்கு அபூபக்ர் (ரலி) அவர்களும் இருந்தனர். அவர்கள் பைத்துல் முகத்தஸைப் பார்த்தவர்கள். அவர்களும் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் பைத்துல் முகத்தஸ் பற்றிப் பல கேள்விகள் கேட்டனர். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிழையில்லாமல் பதில் பகர்ந்தனர். தாம் கேட்கும் கேள்விகளுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பதில் பகரும் போதெல்லாம் அபூபக்ர் (ரலி) அவர்கள், ''அது உண்மையே, அது உண்மையே'' என்று கூறிக்கொண்டே வந்தார்கள். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அகமகிழ்ந்து, 'அபூபக்ரே! நீ சித்தீக்காக (உண்மைபடுத்துபவராக) இருக்கின்றீர்!'' எனக் கூறினர்.

உண்மைப்படுத்தியவர் என்னும் பெயர் பெற்ற அபூபக்ர் (ரலி) அவர்களும், குறைஷிகளைப் போல் ஏன் பைத்துல் முகத்தஸ் பற்றிக் கேள்விகள் கேட்டனர் என்னும் கேள்வி எழலாம். அவர்கள் அவ்விதம் கேள்விகள் கேட்டது, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் செய்த விண் பயணம் பற்றிய ஐயத்தால் அல்ல. பைத்துல் முகத்தஸ் பல முறை சென்ற தாம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியவற்றை உண்மை என அங்கீகரித்தால் குறைஷிகள் தம் குறைமதியுணர்ந்து, அவற்றை நம்பமாட்டார்களா என்னும் ஆசையால்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களை, அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் அதிகமாக நேசித்தனர். அதனால் அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சொற்களை அணுவளவும் மீறவும், அவர்களின் வழி முறையைச் சிறிதளவும் விடவும் விரும்பவில்லை. அதற்கு ஆதாரமாகக் கீழ்வரும் இந்தச் சம்பவங்கள் இருக்கின்றன. அண்ணல்

நபி (ஸல்) அவர்கள் இறந்ததும், அவர்களின் அருமைப் புதல்வி பாத்திமா (ரலி) அவர்கள் தம் தந்தையார், தம் சொந்த பராமரிப் பிற்கென வைத்துக் கொண்டிருந்த சொத்துக்களை அவர்களின் வாரிசு களுக்கு இஸ்லாமியச் சட்டப்படிப் பிரித்துக் கொடுக்கும் படியும், அப்படிப் பிரிக்கும் போது, தமக்குரிய பங்கைத் தம்மிடம் தரும்படியும் கலீபா அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர். அந்தக் கோரிக்கை அபூபக்ர் (ரலி) அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அல்லாஹ்வின் தூதர் அவர்களின் உயிருக்குப் பகரமாய்த் தம் குடும்பத் தார் அத்தனை பேரின் உயிரையும் அர்ப்பணிக்கத் துணிந்தவர்கள் தாம் அவர்கள். ''என் இதயத்தின் துண்டு' என அல்லாஹ்வின் தூதர் அவர் களால் வர்ணிக்கப்பட்ட பாத்திமா (ரலி) அவர்களின் கோரிக்கையை மறுக்குமுன் மரணிக்க விரும்புவர்கள் தாம் அவர்கள். ''வம்சச் சொத்தாக எடுத்துக் கொள்ளத்தக்க எதனையும் இறை தூதரவர்கள் விட்டுச் செல்லவில்லை. அவர்கள் எதை விட்டுச் சென்றார்களோ, அது தர்மத்திற்குப் போகவேண்டும்'' என்னும் அல்லாஹ்வின் தூதர் அவர் களின் சொல்லை மீறும் பிழையைப் புரிந்து விடக் கூடாது என்பதற்காக அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு பாத்திமா (ரலி) அவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்க மறுத்தனர்.

இது பாத்திமா (ரலி) அவர்களையோ, அலீ (ரலி) அவர் களையோ திருப்திப்படுத்தவில்லை. அலீ (ரலி) அவர்கள் இது பற்றித் தம்மிடம் இடித்துரைத்த போது, அபூபக்ர் (ரலி) அவர்கள், ''என் னுடைய உயிர் எவன் கைவசம் உள்ளதோ, அவன்மீது ஆணையாகக் கூறுகிறேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களின் உறவினர்கள், என் உறவினர்களைவிட எனகடு அதிகப் பிரியமானவர்கள். அல்லாஹ் வின் தூதர் அவர்கள் விட்டுச் சென்ற சொத்து விஷயத்தில், அல்லாஹ் வின் தூதர் அவர்களின் விதியை விட்டும் நான் மயிரிழையும் விலகவில்லை'' என்று கூறினர்.

இதுபற்றித் தம்மிடம் பாத்திமா (ரலி) அவர்கள் பேசிய போது அபூபக்ர் (ரலி) அவர்கள், ''அல்லாஹ் மீது ஆணையாக அல்லாஹ்வின் தூதர் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளதைச் சிறிதும் நான் மாற்ற மாட்டேன்'' என அறிவித்தார்கள்; ''ஆனால் 'உங்கள் தந்தையார் உங்களுக்கு இந்தச் சொத்தைத் தந்தார்கள் என்று நீங்கள் நிச்சயமாக இருந்தால் நான் உங்களின் வார்த்தையை ஒப்புக் கொள்கிறேன்'' என அவர்கள் கூறினார்கள். இதைக் கேட்டு பாத்திமா (ரலி) அவர்கள்,

''உம்மு ஐமன் தவிர்த்து வேறு சாட்சியம் இல்லை'' என்று உரைத்ததும் அபூபக்ர் (ரலி) அவர்களால் தம் முடிவை மாற்றிக் கொள்ள முடியவில்லை. இந்த விஷயத்தில் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வளவு கண்டிப்புடன் இருந்ததற்கு இரு காரணங்கள் இருந்தன. ஒன்று, அல்லாஹ்வின் தூதர் அவர்களின் சொல் மீறப்படக் கூடாது என்பது. மற்றொன்று அல்லாஹ்வின் தூதரவர்கள் அவர்கள் இப்படிச் சொல்லியிருப்பதால் அவர்களின் குடும்பத்தார் அந்த நிலங்களிலிருந்து வருபவற்றை உண்ணக்கூடாது என்பது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உயிர் வாழும்போது, தம் வளர்ப்புத் தாயான உம்மு ஐமன் (ரலி) அவர்களை அடிக்கடி சென்று காண்பது வழக்கம். இது அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தெரியும். எனவே அவர்கள் கலீபாவானதும், ''நாமும் அல்லாஹ்வுடைய தூதரின் வழக்கத்தை மேற்கொள்வோம். வாரும்! உம்மு ஐமன் அவர்களைப் போய்ப் பார்த்துக் வருவோம்'' என்று கூறி உமர் (ரலி) அவர்களையும் அழைத்துக்கொண்டு, உம்மு ஐமன் (ரலி) அவர்களின் வீடு சென்றனர். அவர்கள் இருவரையும் கண்டதும், உம்மு ஐமன் (ரலி) அவர்கள் அழத் தொடங்கிவிட் டார்கள். ''நீங்கள் ஏன் அழவேண்டும்? அல்லாஹ்வின் தூதரவர்கள் அல்லாஹ்வின் அருகில் இருப்பது நல்லதல்லவா?'' என்று அவர்கள் இருவரும் கேட்டபோது, உம்மு ஐமன் (ரலி) அவர்கள், ''அதனை நானும் நன்கு அறிந்தே இருக்கிறேன். நான் கவலைப்படுவதெல்லாம் 'வஹீ' வருவது நின்று விட்டதே' என்பதற்காகத்தான்'' என்று கூறினர். உடனே அவர்கள் இருவரும் உம்மு ஐமன் (ரலி) அவர்களுடன் சேர்ந்து அழத் தொடங்கிவிட்டனர்.

ஒருநாள் அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் ''அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்கு ஊழியம் செய்து கொண்டு இன்று அவர்களுடன் இருப்பேன்'' என்று கூறிவிட்டு அவர்களைத் தேடிச் சென்றனர். அப்பொழுது அவர்கள் பீறுஅர்ஸ் என்ற தோட்டக் கிணற்றின் மேட்டின் மீது அமர்ந்திருந்தனர். அப்பொழுது அவர்கள் தம் இரு கெண்டைக் கால்களையும் திறந்து வைத்துக்கொண்டு அக்கிணற்றிற்குள் தொங்க விட்டிருந்தனர். அவர்களுக்கு சலாம் கூறிவிட்டுத் திரும்பி வந்து தலைவாயிலின் அருகில் அமர்ந்துகொண்டு, அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் ''இன்று நான் அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்கு வாயில் காவல்காரனாய் இருப்பேன்'' என்று தமக்குள் கூறிக் கொண்டனர்.

சிறிது நேரத்தில் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கு வந்து கதவைத் தட்டினார்கள். ''யார் அது?'' என்று அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் கேட்டனர். ''அபூபக்ர் என்று பதில் வந்தது. ''அப்படியே நில்லுங்கள்!'' எனக் கூறிவிட்டு, அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சென்றனர். ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அபூபக்ர் (தங்களிடம் வர) அனுமதி கேட்கிறார்'' என்றனர். உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உரைத்தார்கள், ''அவரை அனுமதியும்! அவருக்கு சுவர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி கூறும்!'' என்று. அதன்படியே அபூபக்ர் (ரலி) அவர்கள் சென்று கிணற்றின் மேட்டில் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு வலப்புறம் அமர்ந்து, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் செய்தது போலவே, தங்களின் இருகால்களையும் கிணற்றிற்குள் தொங்க விட்டுக் கொண்டனர். கெண்டைக்கால்களையும் திறந்து கொண்டனர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அளித்த வாக்குறுதிகள் அவர்களின் இறப்பால் நிறைவேற்றப்படாமல் இருந்தால், அவையும் அழகான முறையில் நிறைவேற்றப்பட்டாக வேண்டும் என்பதில் கலீபா அபூபக்ர் (ரலி) அவர்கள் அதிக அக்கறை யுள்ளவர்களாய் இருந்தனர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உயிர் வாழும் போது, ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்களிடம் பஹ்ரைனிலிருந்து பணம் வந்து விட்டால், உமக்கு இப்படி, இப்படித் தருவேன் எனக் கூறியிருந்தனர். பஹ்ரைனிலிருந்து பணம் வருவதற்குள் அவர்கள் இறந்துவிட்டனர். பஹ்ரைனிலிருந்து பணம் வந்த போது, ''அல்லாஹ்வின் தூதர் அவர்கள் நிறைவேற்ற வேண்டிய வாக்குறுதி அல்லது கடன் பாக்கி எவருக்காவது இருந்தால் அவர் நம்மிடம் வந்து வாங்கிக் கொள்ளலாம்'' என்று கலீபா அவர்கள் அறிவித்தார்கள்.

இந்த அறிவிப்பை அறிந்ததும் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கலீபா அவர்களிடம் சென்று, ''அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தங்களின் இறுதிக் காலத்தில் அடுத்த தடவை (பஹ்ரைனிலிருந்து) செல்வம் வரும்போது, கை நிறைய அள்ளித் தருவதாக எனக்கு வாக்களித்திருந்தார்கள். ஆனால் அதற்குள் அவர்களின் வாழ்வு நிறைவடைந்துவிட்டது'' என்று கூறினர். அதைக் கேட்டதும் கலீபா அவர்கள், தம் இரு கைகளாலும் நாணயங்களை அள்ளிப் போட்டு, ''எண்ணும்!'' என்று கூறினர். ஜாபிர் இப்து அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அவ்வாறே தம் கைகளில் விழுந்த நாணயங்களை எண்ணிப்

பார்த்தனர். ஐந்நூறு இருந்தன. ''இதைப்போல் (இன்னொரு மடங்கு) வாங்கிக் கொள்ளும்!'' என்று கலீபா கூறி மற்றொரு முறை அள்ளிப் போட்டனர்.

இவ்விதம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறந்த பிறகும், அவர்களின் வாக்கை கௌரவித்தார்கள் கலீபா அவர்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உயிர் வாழும்போதும், அவர்களுக்குச் சிறு கௌரவக் குறைவும் ஏற்பட அவர்கள் அனுமதித்ததில்லை. அதை உற்றவர்கள் செய்தாலும், மற்றவர் புரிந்தாலும் பொறுக்க முடியாத பொன்மனத்திற்கு உரிமைக்காரர் ஆவார்கள் அவர்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறுதி முறையாக ஹஜ்ஜுக்குப் போய்க் கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களுடன் அவர்களின் மனைவியரான சபிய்யா (ரலி) அவர்களும், ஆயிஷா (ரலி) அவர்களும் தம் தம் ஒட்டகைகளில் ஏறிச் சென்று கொண்டிருந்தனர். சபிய்யா (ரலி) அவர்கள் இருந்த ஒட்டகையில் சாமான்கள் அதிகம் ஏற்றப்பட்டிருந்தன. அதனால் அது மற்ற ஒட்டகைகளுடன் சேர்ந்து செல்லவில்லை. ஆயிஷா (ரலி) அவர்கள் இருந்த ஒட்டகையில் சாமான்கள் அதிகம் ஏற்றப்படவில்லை. அதனால் அதற்கு மற்ற ஒட்டகைகளுக்கு முன் செல்ல முடிந்தது. அத்துடன் சபிய்யா (ரலி) அவர்களின் ஒட்டகை சற்று மெதுவாகச் செல்லக் கூடியது. ஆயிஷா (ரலி) அவர்களின் ஒட்டகை சற்று வேகமாகப் போகக் கூடியது. இந்த விஷயத்தை விளக்கி அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ஆயிஷா (ரலி) அவர்களிடம், சாமான்களைப் பரிமாறிக்கொள்ளும்படிக் கூறினர். இது ஆயிஷா (ரலி) அவர்களை ஆத்திரம் கொள்ள வைத்துவிட்டது. ஆத்திரம் வரும் போது அறிவு சற்று அகன்று விடத்தானே செய்கிறது. எனவே அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து, ''நீங்கள் கூறிக் கொள்கிறீர்கள் நான் அல்லாஹ்வின் தூதன் ஆவேன் என்று, ஆனால் நீங்கள் நியாயமற்றவர்களாக இருக்கிறீர்களே'' என்று கத்திக் கூறிவிட்டனர்.

தம் ஆருயிருக்கும் ஆயிரம் மடங்கு மேலான தம் கண்மணித் தலைவர் மீது இவ்விதம் வெளிப்படையாகக் குற்றம் கூறியதைக் கேட்டதும், அதை மொழிந்தவர் தம் மகளேயாயினும் அபூபக்ர் (ரலி) அவர்கள் கொடுத்தார்கள் ஓர் அடி அவர்களின் கண் மீது. இவ்விதம் அடித்ததை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அங்கீகரிக்கவில்லை. அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைக் கண்டித்தார்கள். ''உங்கள் முன்னிலையில் வைத்து அவள் என்ன கூறினாள் என்பதைத் தாங்கள்

கேட்கவில்லையா?'' என்று அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டனர். ''ஆம், நான் கேட்டேன் தான். ஆயினும் அவர் மன்னிக்கப்பட வேண்டியவர்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர். தாம் பெற்ற பெண் என்ன, தம்மைப் பெற்ற தந்தை கூட அல்லாஹ்வின் தூதர்மீது குற்றம் கூறியதை பொறுக்காதவர்கள் அல்லவா அபூபக்ர் (ரலி) அவர்கள்.

ஒருசமயம் இரு பெண்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருகில் பாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் பாடுவது தம் காதில் பட்டாலும், அவர்களின் தோற்றமும் தம் பார்வையில் படவேண்டாம் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் படுத்துக் கொண்டு, தம் முகத்தைத் திருப்பிக் கொண்டனர். அப்பொழுது பார்த்து அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கு வந்து விட்டார்கள். அவர்கள் அந்தப் பெண்களை அதட்டிவிட்டு, ''ஷைத்தானுடைய கருவிகள் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் (இருக்கும்) இடத்திலா?'' என்று கேட்டார்கள். அதையறிந்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''அவ்விருவரையும் விட்டு விடும்!'' என்று அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்துக் கூறினர்.

இறையச்சம்

அல்லாஹ்வுடைய தூதரின் நட்பையும் பெற்று, அவர்களின் நன்மாராயத்தையும் பெற்றவர்களாய் இருந்தாலும், அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இறையச்சம் அதிகம் இருந்து கொண்டிருந்தது. அதனால் அவர்கள் தீமை செய்து விடுவோமோ, பாவம் புரிந்து விடுவோமோ என்று அஞ்சி அஞ்சியே தம் வாணாளைக் கழித்தார்கள். ''தீமை செய்தவன் தண்டனை அடைவான்'' என்னும் இறைவசனம் இறங்கியதும், அவர்கள் அதிர்ந்தார்கள். ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதை விட்டும் நாங்கள் எப்படி விடுதலை அடைவது?'' என அளவற்ற அச்சத்துடன் அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட போது, ''நீங்கள் நோயுறுவதில்லையா? நீங்கள் துக்கமடைவதில்லையா? இவை முஃமினுடைய பாவத் திற்குத் தண்டனையாகும்'' என்று அவர்கள கூறினர். அதை அறிந்த பிறகு தான் அபூபக்ர் (ரலி) அவர்களின் மனத்திலிருந்த அதிர்ச்சி அடங்கியது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒருநாள், ''எவன் கர்வத்தின் காரணமாகத் தன் ஆடையை இழுத்துக் கொண்டு நடக்கின்றானோ அவன் பக்கம் இறைவன் மறுமை நாளில் பார்க்கவே மாட்டான்'' என்று சொன்னதைக் கேட்டதும் அபூபக்ர் (ரலி) அவர்கள் நடுங்கிப்

போய், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என் ஆடையும் சில வேளைகளில் அப்படி ஆகி விடுகிறதே'' என்ற போது; ''நீ கர்வத்தின் காரணமாக அவ்விதம் செய்வதில்லையே'' என அவர்கள் ஆறுதல் கூறினர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இன்னொரு நாள், ''அல்லாஹ் வுக்கு முந்நூற்று அறுபது தன்மைகள் இருக்கின்றன. எவர் ஏகத் துவத்துடன் இந்தத் தன்மைகளில் ஒன்றைக் கொண்டு அல்லாஹ்வைச் சந்திக்கின்றாரோ, அவர் சுவனம் சேர்வார்'' என்று கூறினர். இவ்விதம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறும்போதெல்லாம், அச்சத்துடனும் அதே சமயம் ஆவலுடனும் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்கும் கேள்வி, ''அவற்றில் ஏதேனும் ஒன்று என்னிடம் இருக்கிறதா, அல்லாஹ்வின் தூதர் அவர்களே?'' என்பது தான். அதே விதம் தான் அவர்கள் இப்பொழுதும் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்த்துக் கேட்டனர். ''அவை எல்லாமும் உம்மிடம் உள்ளன. ஆனால் அவற்றில் அல்லாஹ்வுக்குப் பிரியமானது தயாளம்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

இறையச்சம் அபூபக்ர் (ரலி) அவர்களை இகவாழ்வின் மீதே அச்சம் கொள்ள வைத்து விட்டது. ஒருவர் அவர்களுக்கு ஒரு நாள் தேன் கலந்த பால் கொஞ்சம் கொண்டு வந்து கொடுத்தார். அதனை வாங்கி வாயருகில்தான் கொண்டு சென்றார்கள். என்ன நினைத்துக் கொண்டார்களோ, பாலை அருந்தாமல் பாத்திரத்தைக் கிழே வைத்து விட்டார்கள். அப்பொழுது அவர்களின் கண்கள் கலங்கியிருந்தன. அவற்றிலிருந்து நீரும் வழிந்தது. அதைப் பார்த்ததும், ஆங்கிருந்த மற்றவர் கண்களும் கலங்க ஆரம்பித்தன. அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் கண்களைத் துடைத்துக் கொண்டபோது, தோழர்களில் ஒருவர் கேட்டார், ''தாங்கள் அழுததற்குக் காரணம் யாது?'' என்று. அதற்கு அவர்கள் அளித்த பதில் இது: ''ஒரு நாள் நான் அல்லாஹ்வின் தூதர் சமூகம் அமர்ந்திருந்தேன். அப்பொழுது அவர்கள் தம்மிடம் இருந்த எதையோ தம் கைகளால் தள்ளி விலக்கிக் கொண் டிருக்கக் கண்டேன். ஆனால் அங்கு அவர்கள் விலக்கும்படியாக ஒரு பொருளும் இருக்க வில்லை. அதைப் பார்த்து நான், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது என்ன என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'உலகம், எனக்குத் தன்னை எடுத்துக் காட்டுகிறது. அதனை நான் விலக்கினேன். அதன்பின் அது வந்து தாங்கள் என்னை விலக்கினாலும், தங்களுக்குப் பின் வருபவர்கள் என்னைவிட்டும் தப்ப மாட்டார்கள் என்கிறது' என்று கூறினார்கள். அதனால் தான் நான் இப்பொழுது அதன் கையில் சிக்கியுள்ளேனா என்னும் அச்சத்தால் அழுதேன்.''

இறையச்சத்தால் அவர்கள் அடிக்கடி செய்யும் இறைஞ்சலாக இது இருந்தது. ''இறைவனே! நல்லதை எனக்குக் காட்டு! அதைப் பின்பற்றுவதற்கு உதவி செய்! தீமையை நான் தெரிந்து கொள்ளச் செய்! அதை விட்டும் தப்பிக்க அருள்புரி! நல்லது, கெட்டது ஆகியவற்றிற் கிடையே எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தி விடாதே! மன இச்சைக்கு வழிப்படும்படியும் செய்து விடாதே!''

இறையச்சத்தால் அவர்கள் அதிகம் அழுபவர்களாயும், தொழுபவர்களாகயும் இருந்தனர். இறையச்சம் அவர்களுக்கு மறுமை பற்றிய அச்சத்தை அதிகப்படுத்தியது. அதனால் அவர்கள் மறுமை பற்றி அச்சம் ஏற்பட்டதுமே, பெரு மூச்செறிவார்கள். அடிக்கடி அழவும் செய்வார்கள். அவர்கள் இரவில் அதிக நேரம் நின்றும் தொழு வார்கள். தொழுகையில் நிற்கும் போது இறைவன் முன்னிலையில் நிற்கிறோம் என்னும் உணர்வு அவர்களை விட்டும் சற்றும் அகலாது. அதனால அவர்கள் ஆடாமல் அசையாமல் ஊன்றிவைக்கப்பட்ட கம்பம் போல் காட்சி அளிப்பார்கள்.

இவ்விதம் நின்றே மற்றவர்களும் தொழ வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். அதற்கு ஆதாரம் உம்மு ரூமான் (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பு: ''ஒரு நாள் நான் தொழுத போது கொஞ்சம் அசைந்து கொண்டிருந்தேன். அபூபக்ர் (ரலி) அவர்கள் இதைப் பார்த்து விட்டார்கள். அவர்கள் பலமாகச் சப்தமிட்டார்கள். நான் அச்சத்தால் தொழுகையை முறித்துவிடும் நிலையை அடைந்தேன். பின்னர் அவர்கள் (என்னைப் பார்த்துக்) கூறினார்கள்: தொழுகையில் நின்றால் உறுப்புகளை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும். யூதர்கள் ஆடுவது போன்று ஆடிக் கொண்டு நிற்கக் கூடாது. 'உறுப்புகளை அமைதியாக வைத்திருப்பதும், தொழுகையை முழுமைப் படுத்து வதில் ஒரு பங்காகும்' என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன்'' என்று சொன்னார்கள்.

இறையச்சம் இருந்ததால் அவர்கள் இஸ்லாமிய மார்க்க விஷயத்திலும் அதிகப் பேணுதல் உள்ளவர்களாய் இருந்தனர். அதற்கு ஆதாரம் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறும் இந்த நிகழ்ச்சி: ''என் தந்தையார் ஐந்நூறு ஹதீஸ்களைக் கொண்ட நூல் ஒன்றைத் தொகுத்து வைத்திருந்தனர். ஒரு நாள் இரவு அவர்கள் ஒரு விதக் கலக்கத்துடன்

பாயில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தார்கள். அவர்கள் உறும் நிலை பார்த்து, நான் உள்ளம் பொறாமல், 'எந்தையே! உடல் நலம் சரியில்லையா? வருந்தத்தக்க விஷயம் எதையாவது கேள்விப்பட்டுத் தாங்க முடியாமல் இப்படித் தவிக்கிறீர்களா?'' என வினவினேன். அதற்கு அவர்கள் பதில் அளிக்கவில்லை. இரவு முழுவதும் இப்படியே புரண்டு கொண்டு கிடந்து விட்டு, விடிந்ததும் அவர்கள், 'ஆயிஷா! நான் உன்னிடம் தந்திருந்த அந்த ஹதீஸ் திரட்டை எடுத்து வா!'' என்று கூறினார்கள். நான் அதனை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தேன். அதனை அவர்கள் நெருப்பிலிட்டு எரித்தார்கள். ''அதனை இவ்வாறு எரிக்கக் காரணம் என்ன?'' என்று நான் கேட்ட போது, ''நான் இறந்து விட்டபிறகும் இது அழியாது இருந்து விடும் என்னும் ஐயத்தால் நான் அதனை எரித்தேன். இதில் நான் அல்லாஹ் வின் தூதரிடமிருந்து கேட்டவற்றை, நான் புரிந்து கொண்ட அளவு தான் எழுதியிருக்கிறேன். நான் எழுதியவற்றில் சில அவர்கள் கூறியதற்குச் சொல்லிற்குச் சொல் சரியில்லாமலும் இருக்கலாம். ஓரிரு சொற்கள் எங்காவது தவறியும் இருக்கலாம். அல்லாஹ்வின் தூதர் சொற்களில் தவறே வரக்கூடாது. அதனால் ஏற்படும் தீய விளைவு களுக்கு நான் காரணமாய் இருக்க வேண்டியிருக்கும்'' என அவர்கள் பதில் அளித்தனர்.

அச்சத்தின் காரணமாகவும், அதனால் ஏற்பட்ட பேணுதலின் காணமாகவும் அவர்கள், இப்படிச் செய்தாலும், அவர்கள் ஹதீஸ்களை அறிவிப்பதில் எத்தகையவர் என்பதற்கு ஆதாரம் அலீ (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பு : ''எவராவது அல்லாஹ்வுடைய தூதர் அவர்கள் ஹதீஸை எடுத்துரைத்தால், பேணுதலுக்காக நான் அவர்களிடம் சத்தியப் பிரமாணம் வாங்குவதுண்டு. ஆனால் அபூபக்ர் அவர்களிடம் அவ்விதம் வாங்குவதில்லை. அவர்கள் இதைவிட (சத்தியப் பிரமாணங்களை விட) உயர்ந்தவர்களாய் இருந்தார்கள்.''

இறையச்சத்தின் உச்சம் அவர்களைத் தாம் ஒரு மனிதராகப் பிறந் திருக்கக் கூடாது என்று கூட எண்ண வைத்துவிட்டது. அவர்கள் ஒரு நாள் மரக்கிளை ஒன்றில் குருவி ஒன்று குதூகலமாய் இருந்து கொண் டிருப்பதைக் கண்டார்கள். அதைப் பார்த்து அவர்கள், ''குருவியே! நீ மகிழ்ச்சியுடன் இருக்கிறாய், மரம்தரும் கனிகளைத் திண்கிறாய். அதன் நிழலில் வாழ்கிறாய், அல்லாஹ்விடம் கணக்குக் கூறவேண்டும் என்னும் அச்சம் உனக்கு இல்லை. உன்னைப் போன்ற நிலையில் நானும் இருந்திருக்கக் கூடாதா என ஏங்குகிறேன்'' என்று கூறினார்கள்.

அவர்கள் இன்னொரு நாள் தோட்டம் ஒன்றிற்குச் சென்றார்கள். அங்கு சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருந்த ஒரு மிருகத்தைப் பார்த்துப் பெருமூச்செறிந்துவிட்டு, ''மிருகமே! நீ எவ்வளவு இன்பத்துடன் வாழ் கிறாய். சுதந்திரமாக எதையும் உண்ணவும், குடிக்கவும் செய்கிறாய். மரங்களின் நிழல்களில் திரிகிறாய். இறுதித் தீர்ப்பு நாளின் போது எவ்விதக் கேள்வி கணக்கும் உனக்கு இல்லை. அந்தோ, இந்த அபூபக்ரும் உன்னைப் போல் இருந்திருக்கக் கூடாதா?'' என்று கூறினார்கள்.

பல சமயங்களில் அவர்கள் இப்படிச் சொல்லியிருக்கின்றனர் : ''அபூபக்ர் மரமாகப் பிறந்திருக்கக் கூடாதா? அப்படிப் பிறந்திருந்தால் வெட்டப்பட்டு விறகாகப் பிறருக்குப் பயன்பட்டிருப்பேனே! புல்லாகப் பிறந்திருக்கக் கூடாதா? அப்படிப் பிறந்திருந்தால், மிருகங் களுக்கு இரையாகவாவது பயன்பட்டிருப்பேனே, மறுமையில் கேள்வி கணக்கு இல்லாமல் போயிருக்குமே.''

சில சமயங்களில் இப்படியும் சொல்லியிருக்கின்றனர் : ''நான் முஸ்லிமான அடியானின் விலாப்புறத்தில் ஒட்டியிருக்கும் உரோம மாக இருக்கக் கூடாதா? நான் ஒரு முஸ்லிமின் மார்பில் முளைத்த உரோமமாகவேனும் இருக்கக் கூடாதா?''

இறையச்சத்தால் இற்று, மறுமை பற்றிய பயத்தால் மக்கிப் போயிருந்த இந்த மக்கியின் உண்மை நிலையை, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இச்சொற்கள் உருவகப்படுத்துகின்றன. ''நடமாடும் பிரேதம் ஒன்றைப் பார்க்க விரும்பினால் (அவர்) அபூபக்ரைப் பார்க்கவும்!''

இவ்வித நிலையில் இருந்ததால் தான் அபூபக்ர் (ரலி) அவர்கள் பின்வருமாறு அல்லாஹ்விடம் அழுது இறைஞ்சுவதைத் தம் அகலா வழக்கமாய்க் கொண்டிருந்தார்கள்: ''இறைவனே! உன் அருள் கருணையினால் மிகவும் குறைந்த கட்டுச் சாதம் (மறுமை வாழ்விற்குத் தேவையான இறை பக்தி) வைத்திருப்பவருக்கு நீ நன்கொடை அளிப் பாயாக! உண்மையற்ற (அபூபக்ர்) உன் வாயிலில் வந்து நிற்கிறார். அவர் குற்றங்களெல்லாம் மிகப் பெரியவையாகும். அவரின் அப்பெரும் குற்றங்களையெல்லாம் நீ மன்னித்து விடுவாயாக!

''இறைவனே! (மறுமையில்) என் நிலைமை என்னவாகுமோ தெரியவில்லையே. என்னிடத்தில் நற்செயல்கள் எவையும்

இல்லையே. துர் நடத்தைதானே அதிகம் இருக்கிறது. வழிபாடு என்னும் கட்டுச் சாதமும் மிகவும் குறைவாய் இருக்கிறதே.

''இறைவனே! 'குளிர்ச்சியடைவாயாக!' என நபி இபுராஹீம் (அலை) அவர்களுக்குத் தயார் பண்ணப்பட்ட நெருப்புக் குண் டத்தைப் பார்த்து நீ கூறியது போல எனக்காகத் தயார் பண்ணப் பட்டிருக்கும் நரகத்தைப் பார்த்தும் கூறிவிடுவாயாக!''

இவ்விதம் அபூபக்ர் (ரலி) அவர்கள் அஞ்சியதற்கு அவசியமே இல்லை. ஏனெனில் அவர்களிடம் இஸ்லாம் வலியுறுத்திய விழுமிய ஒழுக்கங்கள் அனைத்தும் அப்படியே அமைந்திருந்தன. அதற்கு ஆதாரம் இந்தச் சம்பவம் : ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம்மைச் சூழ்ந்திருந்த தோழர்களைப் பார்த்து, ''எத்தனை பேர் இன்று நோன்பு நோற்றிருக்கிறீர்கள்?'' என்று கேட்டனர். அபூபக்ர் (ரலி) அவர்கள், ''நான் நோற்றிருக்கிறேன்'' என்றார்கள். ''இன்று யார் ஒரு பிரேதத்துடன் புதை குழி வரை சென்றவர்?'' என்று கேட்டனர். அபூபக்ர் (ரலி) அவர்கள், ''நான் சென்றேன்'' என்றார்கள். ''இன்று யார் ஓர் ஏழைக்கு உணவளித்தவர்?'' என்று கேட்டனர். அபூபக்ர் (ரலி) அவர்களே, ''நான் அளித்தேன்'' என்றார்கள். ''இன்று யார் ஒரு நோயாளியைச் சென்று கண்டவர்?'' என்று கேட்டபோதும், அபூபக்ர் (ரலி) அவர்கள் மட்டுமே, ''நான் சென்று கண்டேன்'' என்று பதிலிறுத் தார்கள். அவர்களைத் தவிர்த்து வேறு எவராலும் நான் என்றோ நானும் என்றோ பதில் அளிக்க இயலவில்லை. இதை அறிந்ததும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அப்பொழுதே கூறிவிட்டனர், ''இந்த உயர் பண்புகள் ஒரு சேரப் பெற்றிருப்பவர் சுவனம் சேர்வர்'' என்று இதற்கு முன் எப்பொழுதோ கூறிவிட்டனர்,'' ''உலகில் வைத்தே சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் பெற்ற பதின்மரில் ஒருவர் ஆவார் அபூபக்ர்'' என்று.

இரக்ககுணம்

அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இருந்த உயர் குணங்களில் ஒன்று இரக்கம். பத்ர் களத்தில் பிடிபட்ட கைதிகளை என்ன செய்வது என்னும் பிரச்சினை எழுந்தபோது, அவர்களை விடுவித்துவிட வேண்டும் என வாதாடியவர்கள் அவர்கள் தாம். மக்காக் குறைஷிகள் ஹுதைபிய்யாவில் வைத்துச் செய்யப்பட்ட உடன்படிக்கையை மீறிச் செயல்பட்டபோது, அதுபற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களையும், உமர் (ரலி) அவர்களையும் அழைத்து ஆலோ

சனை கேட்டனர். அப்பொழுது அபூபக்ர் (ரலி) அவர்கள். ''அல்லாஹ் வின் தூதர் அவர்களே! அவர்களும் தங்களுடைய சமூகத்தவர்கள் தாம்'' என்னும் ஒற்றைச் சொற்றொடரையே தம் ஆலோசனையாக அளித்தனர். ஈரமற்ற நெஞ்சம் பெற்றவர்கள் தாம் மக்காக் குறைஷிகளாயினும் அவர்கள் மீதும் இரக்கம் காட்டப்பட வேண்டும் என்பதே அபூபக்ர் (ரலி) அவர்களின் அந்த ஒற்றைச் சொற்றொடரில் மறைந்திருந்த கருத்தாய் இருந்தது. ஆனால் உமர் (ரலி) அவர்களோ பத்ர் கைதிகள் விஷயத்தில் போலவே இவ்விஷயத்திலும் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்திற்கு நேர் எதிரான கருத்துக் கொண்டிருந்தனர். ''அவர்கள் தங்களைப் பொய்ப்பித்தவர்கள். தங்களை நாட்டை விட்டு வெளியேற்றியவர்கள். தங்களை எதிர்த்துப் போர் செய்தவர்கள். ஆகவே அவர்களை வெட்டி விட வேண்டியது தான். ஏனெனில் அவர்கள் இறை மறுப்புக்குத் தலைமை வகித்தவர்கள் என்று மக்காக் குறைஷிகளின் தீய தன்மைகளை எடுத்துக் கூறி விட்டு, அவர்களை விட்டு விடுவதல்ல, வெட்டுவதே உகந்த வழி என்று சொல்லிவிட்டு, மக்காக் குறைஷிகள் கீழ்படியாதவரை மற்ற அரபிகள் அடிபணிய மாட்டார்கள்'' என்று உமர் (ரலி) அவர்கள் உரைத்தார்கள். இதனால் தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்தனர். என் உம்மத்துகள் மீது அதிகம் இரக்கம் உள்ளவர் அபூபக்ர்'' என்று

அமீர்களில் ஒருவர் தோற்ற படைத் தளபதியின் வெட்டப் பட்ட தலையையும், வெற்றிச் செய்தியையும் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்த போது, தரிக்கப்பட்ட தலை அனுப்பப்பட்டது கண்டு தருக்கடையவில்லை அவர்கள். அதற்கு மாறாக அதிகம் கோபம் கொண்டார்கள். ''இவ்விதமே நம் பகைவர் செய்கின்றனர்'' எனத் தலையைக் கொண்டு வந்தவர் தெரிவித்த போது, ''நாம் உரோமம், பாரசீகத்தைப் பின்பற்றுபவர்கள் அல்லர்'' என்று அவர்கள் கூறி னார்கள். அதன்பின், 'இனிமேல் எவரும் தோற்ற பகைவரின் தலையை வெற்றிச் செய்தியுடன் அனுப்பி வைக்க கூடவே கூடாது' என அமீர் களுக்குக் கண்டிப்பாக கட்டளையிட்டார்கள்.

குற்றம் புரிந்தவனோ, புரியாதவனோ அகப்பட்டுக் கொண்டால் அவனை மாட்டிவைத்து விடவேண்டும் என்று ஆசைப்படுபவர்களே அதிகம் பேர். ஆனால் அபூபக்ர் (ரலி) அவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர். 'குற்றம் புரிந்தவன் அவர்களிடம் அகப்பட்டால், குற்றவாளி அகப்பட்டுக் கொண்டான் என்னும் ஆனந்தமோ, குற்றம் புரிந்தவன்

அல்லவா என்னும் ஆத்திரமோ அவர்கள் அடைவதில்லை. அதற்கு மாறாக அவர்கள் மனத்தில் எழும் உணர்ச்சி இரக்கம் தான். அவர்கள் கூறினார்கள்: ''நான் ஒருவனைப் பிடிக்கும் போது, அவன் களவு செய்தவனாய் இருந்தாலும், கள்குடித்தவனாய் இருந்தாலும் அந்தக் குற்றம் அவனிலிருந்து வெளியாகாதபடி அல்லாஹ் மறைத்து விடவேண்டும் என்றே விரும்புவேன்.

அன்பு

ஒருவரிடம் இரக்க குணம் இருந்தால் அவர் மனத்தில் அன்பு அதிகம் இருக்கிறது என்பதற்கு அது அறி குறி. ஏனெனில் இரக்க நீர் இறைக்கப்படும் போது, அன்புச் செடி அவசியம் வளரும். அபூபக்ர் (ரலி) அவர்கள் மனத்தில் அன்பு அதிகம் இருந்தது அவர்கள் எல்லோர் மீதும், குறிப்பாக குழந்தைகள் மீதும் அதிக அன்பு கொண்டிருந்தார்கள். குழந்தைகளை அவர்களும் தழுவிக் கொள்வர். அவர்களின் குழந்தைகள் மட்டுமல்ல, அனைத்துக் குழந்தைகளும் அவர்களை 'பாபா' என்று தான் அழைப்பது வழக்கம்.

அடக்கம்

பிறரை நேசிப்பதற்கும், மதிப்பதற்கும் அடக்கம் என்னும் அரியகுணம் இருப்பது அவசியம். அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அது அதிகம் இருந்தது. அதனால் அவர்கள் இளையவர் களை அதிகம் நேசித்தார்கள். முதியவர்களை மிகவும் மதித்தார்கள். அபூ முகம்மது ஹரீரி என்னும் பெரியார் ஒருவர் மக்காவில் தங்கியிருந்தார். அவர் அங்குத் தங்கியிருந்த ஓர் ஆண்டு முழுவதும் தூங்கவில்லை. பேசவில்லை. தலையணையிலோ சுவரிலோ சாயவுமில்லை, காலை நீட்டவுமில்லை. அதை அறிந்து அவர்கள் அவரைப் பார்க்கச் சென்றார்கள். அவரைக் கண்டதும் அவர்கள் அவருக்கு சலாம் சொன்னார்கள். அவர் பதில் கூறினார். ''எதற்காக நீங்கள் இப்படி சிரமம் எடுத்துக் கொள்கி றீர்கள்?'' என்று அவரைப் பார்த்து அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர், ''என் இதயத்தில் ஒளிவிட்ட உண்மையான அறிவு, என் உறுப்புகள் அனைத்தையும் திருத்தி அமைத்து விட்டது'' என்று பதில் கூறினார். அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்குச் சில கணம் அமைதியாக நின்றார்கள். அவரிடம் மேற்கொண்டும் எதுவும் கேட்க அவர்களுக்குத் துணிவு ஏற்படவில்லை. அவ்விடத்தை விட்டும் சிந்தனையுடன் வெளியேறினார்கள்.

முதியவர்களை அவர்களும் மதித்தார்கள். பிறரையும் அவ்வாறு மதிக்கும்படி அறிவுரை பகர்ந்தார்கள். ஒரு நாள் தோழர் ஒருவர் அவர்களிடம் வந்து, ''என் காரியங்களும், வேலைகளும் கஷ்டமாகவும், மோசமாகவும் இருக்கின்றன. அதற்கு ஒரு நல்ல வழி கூறுங்கள்!'' என்று அவர்களை வேண்டிக் கொண்டார். அவரைப் பார்த்து அவர்கள், ''உம் காரியங்கள் நன்மையாக வேண்டுமானால், உம்மை விட வயதில் முதிர்ந்த நல்ல பெரியோர்களை அதில் முற்படுத்திக் கொள்ளும்! அதுவே உமக்குச் சிறப்பையும் பரக்கத்தையும் கொடுக்கப் போதுமானதாகும்'' என்று கூறினார்கள்.

பிறரை மதித்த அவர்கள், தம்மை பிறர் மதிப்பதை விரும்பவில்லை. பிறர் தம்மை அதிகம் மதிப்பதைப் பார்த்து அவர்கள் கூறுவார்கள். ''என்னை மக்கள் அதிகம் உயர்த்தி விட்டார்களே'' என்று. தம்மை எவராவது புகழ்ந்தால், ''அவ்விதம் புகழ வேண்டாம்'' என அவரிடமும் கூறுவார்கள். இறைவனிடமும் இவ்விதம் இறைஞ்சுவார்கள் : ''இறைவனே! என் நிலையை என்னைவிட நீ நன்கறிவாய். என் நிலையை இந்த மக்களை விட நான் நன்கறிவேன். இறைவனே! என்னை அவர்களுடைய எண்ணத்தில் நல்லவனாக ஆக்கிவிடு! என்னுடைய தவறுகளை அவர்கள் அறியாதவர்களாய் இருக்கிறார்கள். ஆதலால் அந்தத் தவறுகளை மன்னித்துவிடு! என்னைத் தூய்மையுள்ளவனாக ஆக்கு! என் பாவங்களை மன்னித்தருள்! என் தகுதிக்கு மேற்பட்ட மக்களின் புகழ் மொழிகளுக்குக் கணக்குக் கேட்க என்னை அழைக்காதே!''

அடக்க குணம் அவர்களிடம் அதிகம் இருந்தால், அவர்கள் அடிக்கடி இப்படிக் கூறிக் கொள்வது வழக்கம்: ''என் முடிவு சரியானதாய் இருந்தால், அதற்கு வழி காட்டுதல் அல்லாஹ்விடமிருந்து வந்ததாகும். நான் தவறு செய்தால், அந்தத் தவறு என்னுடையதாகும். அல்லாஹ் என்னை மன்னித்தருளட்டும்!''

ஒரு நாள் அவர்களிடம் தோழர் ஒருவர் வந்தார். ''அபூபக்ரே! நான் போலி விசுவாசியைப் போல் ஆகி விட்டேன். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் சமூகத்தில் அமர்ந்திருக்கும் போது எனக்கு ஏற்படும் ஈமானின் நிலை, மனைவி மக்கள் மத்தியில் இருக்கும் போது மாறி விடுகிறது'' என்று கூறினார். அதைக் கேட்டு அவர்கள், ''என் நிலையும் அப்படித்தான் இருக்கிறது'' என்றார்கள். இருவரும் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சென்று தங்களுக்கு இருக்கும் பலவீனத்தை

எடுத்துக் கூறினர். அதைக்கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ''ஈமானின் நிலை ஒவ்வொரு சமயமும் இப்பொழுது இருப்பது போலவே இருக்க முடியாது. அப்படி நீடித்திருக்குமாயின், மனிதத் தன்மையைக் கடந்து அமரர்களில் ஒருவராக ஆகிவிடுவீர்,'' என அறிவித்தனர்.

அடக்கமாய் இருந்த அவர்கள், அடக்கத்தைப் பற்றி இவ்விதம் இயம்பியிருக்கிறார்கள்: ''பாவத்திற்கு மன்னிப்புக் கேட்பது மேலானது. பாவத்தை விட்டும் தப்பித்திருப்பது அதையும் விட மேலானது. துன்பத்தில் பொறுமை காட்டுவது நல்லது. அந்தப் பொறு மையைப் பாதுகாப்பது அதையும்விட நல்லது. வெட்கம் ஆண் களுக்கு நல்லது. ஆனால் அது பெண்களுக்கு அதையும் விட நல்லது. பாவமன்னிப்புக் கோருவது முதியவருக்கு நல்லது. இளையவனுக்கு அதையும் விட நல்லது. மன்னிப்பளிப்பது செல்வனுக்கு நல்லது. வறியவனுக்கு அதையும் விட நல்லது. பாவம் செய்வது இளைஞ னுக்குக் கெட்டது. கிழவனுக்கு அதையும் விடக் கெட்டது. உலகில் ஈடுபடுவது அறியாதவனுக்குக் கெட்டது. அறிந்தவனுக்கு (ஆலிமுக்கு) அதையும் விடக் கெட்டது. இறைவனைத் தொழுவதிப் சோம்பல் படுவது சாதாரன மனிதனுக்குக் கெட்டது. அறிந்த வனுக்கும் (ஆலிமுக்கும்) அறிவைத் தேடுபவனுக்கும், அதையும் விடக் கெட்டது. கர்வம் கொள்வது செல்வனுக்குக் கெட்டது. வறியவனுக்கு அதையும் விடக் கெட்டது. அடக்கம் ஏழைகளுக்கு நல்லது. அரசர்களுக்கு அதையும் விட நல்லது.''

அடக்க குணம் இருந்தால் தான் அவர்கள் தாம் புரிந்தது பிழை எனத் தெரிந்த மறுகணமே, அதற்காக மன்னிப்புக் கோரத் தயாராய் இருந்தார்கள். ஒரு சமயம் அவர்களுக்கும் உமர் (ரலி) அவர்களுக்கும் ஒரு விஷயத்தில் சற்று மனத் தாங்கல் ஏற்பட்டு விட்டது. தவறு தம்முடையது தான் என உணர்ந்ததும் அவர்கள், உமர் (ரலி) அவர்களைப் பார்த்துத் தம்மை மன்னிக்கும்படி வேண்டினார்கள். ஆனால் உமர் (ரலி) அவர்களோ, அவர்களை மன்னிக்க மறுத்து விட்டனர். அதற்குக் காரணம் உமர் (ரலி) அவர்கள் ஆத்திரமுற்று இருந்தாகும். உடனே அபூபக்ர் (ரலி) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். அப்பொழுது அவர்கள் தம் வேஷ்டியின் ஒரு மூலையைப் பிடித்துக் கொண்டு வந்தனர். அதனால் அவர் களுடைய முழங்கால் திறந்திருந்தது. அதைப் பார்த்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பக்கத்திலிருந்த அபூதர்தா (ரலி) அவர்களிடம்,

'உங்களின் தோழர் சண்டையிட்டிருக்கிறார்'' என்று கூறினார். அபூபக்ர் (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு சலாம் கூறிவிட்டு, ''அல்லாஹ்வின் தூதர் அவர் களே! எனக்கும் கத்தாபுடைய மகனுக்கும் இடையில் ஒன்று நிகழ்ந்தது. அவரிடம் நான் அவசரப்பட்டுப் பேசிவிட்டேன். பிறகு நான் பேசியது தவறு என உணர்ந்து, கழி விரக்கம் கொண்டு, என்னை மன்னிக்கும்படி அவரை நான் கேட்டுக் கொண்டேன். அவர் மறுத்துவிட்டார். இப்பொழுது நான் தங்களிடம் வந்திருக்கிறேன்'' என்றார்கள்.

அதுகேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ''அபூபக்ரே! அல்லாஹ் உம்மை மன்னிப்பான்'' என மும்முறை கூறி அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஆறுதல் கூறினர். பிறகு தான் உமர் (ரலி) அவர்கள் தாம் மன்னிக்க மறுத்த தவற்றினை உணர்ந்து அபூபக்ர் (ரலி) அவர்களைக் காண அவர்களின் வீடு சென்றனர். அங்கு அவர்கள் இல்லாதது அறிந்ததும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இல்லம் வந்து அவர்களுக்கு சலாம் கூறினர். உமர் (ரலி) அவர்களைப் பார்த் ததும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகு முகம் செக்கர்வானம் போல் சிவந்து விட்டது. அதைக் கண்டு அஞ்சியவர்கள் உமர் (ரலி) அவர்கள் மட்டுமல்ல, அபூபக்ர் (ரலி) அவர்களும் ஆவர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களை அதிகம் கடிந்து விடுவரோ என்பதுதான் அபூபக்ர் அவர்களின் அச்சத்திற்கும் காரண மாகும். எனவே அவர்கள் தம் இரு முழங்கால்களையும் ஊன்றி மண்டியிட்டு அமர்ந்து கொண்டு ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உமரை விட நான் தான் அதிகம் ஆத்திரமுற்று விட்டேன்'' என்று கூறினர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அங்கிருந்த வர்களைப் பார்த்து இருமுறை பகர்ந்தனர். ''என்னை உங்களிடம் தன் தூதராக அல்லாஹ் அனுப்பினான். 'நீர் பொய்யுரைக்கின்றீர்' என்று நீங்கள் கூறினீர்கள். 'அவர்கள் உண்மையுரைக்கிறார்கள்' என அபூபக்ர் கூறி, தம் உடலாலும் பொருளாலும் என்னுடன் ஒத்துழைத்தார்'' இதன் பின்னர் உமர் (ரலி) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்கள் வருத்தமுறுகிறாற் போல் எதுவுமே செய்வதில்லை.

ஈகை

ஈவதில் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இணையாக இன்னொரு வரைக் கூற இயலாது. அதற்கு ஆதாரம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இந்த அறிவிப்பு : ''மற்ற எல்லா மனிதர்களிலும்

அபூபக்ரே மிகவும் அதிகமான தர்ம குணம் கொண்டவர்'' இவ்விதம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆதாரம் இல்லாமல் அறிவிக்க வில்லை. ஒரு நாள் ஒருவர் உமர் (ரலி) அவர்களைத் தெருவில் கண்டு, ''ஜகாத் எவ்வளவு கொடுக்க வேண்டும்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள், ''நாற்பதில் ஒன்று'' என்று பதில் அளித்தனர். அவர்களிடம் விடை பெற்றுச் செல்லும் போது, அவர் வழியில் அபூபக்ர் (ரலி) அவர்களைக் கண்டார். அவர்களிடமும் கேட்டுப் பார்ப்போமே என்னும் எண்ணம் எழுந்தது அவருக்கு. எனவே அவர் அவர்களைப் பார்த்து, ''ஜகாத் எவ்வளவு கொடுக்கவேண்டும்?'' என்று கேட்டார். ''நாற்பதில் முப்பத்தொன்பது'' என்று அவர்கள் பதில் கூறினார்கள். உமர் (ரலி) அவர்களின் பதிலைக் கேட்டு மகிழ்ந்த அவர், அபூபக்ர் (ரலி) அவர்களின் பதிலைக் கேட்டு அதிர்ந்தார். இந்தக் குழப்பத் திலிருந்து தெளிவு பெற அவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சென்று, இருவர் கூறியதையும் இயம்பி, அவர்களிடம் விளக்கம் வேண்டினார். ''அதுவும் நன்மையானதே, இதுவும் நன்மையானதே'' என்று அவர்கள் கூறியதுடன், ''நீர் அதிகம் நேசிக்கக்கூடிய ஒன்றைக் கொடுக்காத வரையில், அல்லாஹ்வின் அன்பைப் பெற முடியாது'' என்றும் அறிவித்தார்கள். அத்துடன் அவர்கள் அவருக்கு 'லந்தனாலுல்' என்னும் இறைவசனத்தையும் ஓதிக்காட்டினார்கள்.

அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இதற்கு ஒரு விளக்கம் இருந்தது. ''நாற்பதில் ஒன்பது என்பது கருமிகளின் ஜகாத், முழுவதையும் கொடுப்பதே சிதீக்குகளின் ஜகாத்'' என்று அவர்கள் கூறுவார்கள். அவர்கள் தம்மிடமிருந்த பொருள்கள் அனைத்தையும் தர்மம் செய்ததைப் பார்த்து முஸ்லிம்களில் சிலரே குறை கூறினர் என்றும், அப்பொழுது இறைவன் இந்த வசனத்தை இறக்கி வைத்தான் என்றும், அலீ (ரலி) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்படுகிறது. (இங்கு) உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதெல்லாம் (நிலையற்ற) இவ்வுலக வாழ்க்கைக்குரிய (அற்ப) இன்பங்களே, விசுவாசங் கொண்டு, தங்கள் இறைவனையே முற்றிலும் நம்பி இருப்போருக்கு, அல்லாஹ்விடத்தில் உள்ளதோ மிக்க மேலானதும், நிலையான துமாகும். *(42:36)*

ஜகாத் பற்றி இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் கருத்து இது: ''ஒரு முஸ்லிம் எல்லாப் பொருள்களையும்விட, அல்லாஹ்வையே அதிகம் நேசிக்க வேண்டும். அவ்விதம் அவன் நேசிப்பதற்கான அறிகுறி தான், அவன் தனக்குப் பிரியமான பொன், பொருளிலிருந்து

ஒரு பகுதியை ஏழைகளுக்கு வழங்குவது. இப்படிக் கொடுப்பவர் களில் மூன்று வகையினர் உண்டு: இவர்களில் முதல் வகையினர் நாற்பதில் ஒரு பங்கு கொடுப்பது போதாதென்று, கைவசமுள்ள அனைத்தையுமே அள்ளி வழங்கிவிடுவர். அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்விதம் தான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் தம் பொருள் களைக் கொண்டு வந்து குவித்து ஏழைகளுக்கு வழங்கச் செய்தனர். எனவே இந்த முதல் வகையினர் இறைவனின் உண்மை நேசர்கள் ஆவர். இரண்டாம் வகையினர் ஒரே முறையில் தம் கைப்பொருள் முழுதையும் கொடுத்து விடாமல், காப்பாற்றி வைத்திருந்து, ஏழைகளுக்குத் தேவைப்படும் போது கொடுப்பவர்கள். மூன்றாம் வகையினர் கடமையை மட்டும் சரியாக நிறைவேற்றுபவர்கள். அவர்கள் நூற்றில் இரண்டரைப் பங்கை ஒழுங்காகக் கொடுத்து விடுபவர்கள்.''

அபூபக்ர் (ரலி) அவர்கள் தாம் ஈட்டிய 40,000 திர்ஹங்களையும், இரவிலும், பகலிலும், இரகசியமாகவும், பகிரங்கமாகவும் தர்மம் செய்தது குறித்தே, இறைவன் கீழ்வரும் வசனத்தை இறக்கி வைத்தான் என்றும் கூறப்படுகிறது: ''(விசுவாசிகளே) எவர்கள் தங்கள் பொருள்களை (தர்மத்திற்காக) இரவிலும் பகலிலும் இரகசியமாகவும் பராசியமாகவும் செலவு செய்கின்றார்களோ, அவர்களுக்கு, அவர் களுடைய கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் உண்டு. தவிர அவர்களுக்கு (மறுமையில்) யாதொரு பயமுமில்லை. அவர்கள் துக்கிக்கவு மாட்டார்கள்.'' *(2 :274)*

இறைவனின் இந்த இருவசனங்களும் தம்மிடமுள்ளவை அனைத்தையும் தானம் கொடுத்ததால், வறுமையை வரவழைத்துக் கொண்ட அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு மறுமையில் பெரிய பாக்கியங்கள் காத்திருக்கின்றன என நன்மாராயம் நவிலுபவை யாகவே அமைந்திருக்கின்றன.

அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் செல்வம் அனைத்தையும் தர்மம் செய்ததற்கு ஒரு காரணம் இரக்கம் என்றாலும், இன்னொரு காரணம் செல்வத்தைத் துறக்கவேண்டும் என்பதுமாகும். அதனால் பிறரின் வறுமை போக வேண்டும், தமக்கு வறுமை வர வேண்டும் என்றும், அவர்கள் விரும்பினார்கள். ''இறைவனே! எனக்கு ஏராளமாக உலகப் பொருள்களையும் கொடு! ஆனால், அவற்றைத் துறக்கும் விருப்பம் உள்ளவனாகவும் ஆக்கு!'' என்று அவர்கள் இறைஞ்சியிருக்கின்றனர்.

இதன் பொருள். ''உலகப் பொருள்களை ஏராளமாக எனக்குக் கொடு! அவற்றிற்காக நான் நன்றி செலுத்தலாம். அதன் பின் அவற்றிலிருந்து உனக்காக விலகியிருக்கச் செய் அவ்விதமானால் தான் என் வறுமையை வலிய எடுத்துக் கொண்டதாய் இருக்கும். வற் புறுத்தித் திணிக்கப்பட்டதாய் இராது. வறுமை வற்புறுத்தித் திணிக்கப்பட்ட தாய் இருந்தால் அவன் வறுமையின் பிராணி; வறுமை வலிய எடுத்துக் கொள்ளப்பட்டதாய் இருந்தால் வறுமை அவனுக்குப் பிராணி'' என்பதாகும்.

அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் செல்வம் அனைத்தையும் தர்மம் செய்தது, கஞ்சத் தனத்தை விட்டு விடுபடவும், அல்லாஹ் பால் தனிக்கவும் என்றும் கூறப்படுகிறது. அவர்கள் செல்வத்தை விரும் பியது, அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி கூறவும், செல்வத்தைத் துறக்கவும் ஆகும். செல்வம் இருந்தால் தானே அதற்காக நன்றி கூற முடியும். செல்வம் இருந்தால் தானே அதைத் துறக்க முடியும்.

அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்த அழகிய குணம் பிறருக்குக் கொடுக்கும் போது, அவர்களின் மனம் ஒரு போதும் கோணாதிருந் ததாகும். பிறருக்கு எப்படிக் கொடுக்க வேண்டும் என அவர்கள் இப்படிக் கூறுகிறார்கள். ''ஏழைகளுக்கு மகிழ்ச்சியுடன் கொடுப்பதே அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்படும் தர்மமாகும்.''

விருந்தோம்பல்

பிறருக்குக் பொருள் ஈவதில் மட்டுமல்ல, பிறருக்கு விருந்து வைப்பதிலும் அபூபக்ர் (ரலி) அவர்கள் எவருக்கும் பின் தங்கியவர்கள் அல்லர். ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திண்ணைத் தோழர்களில் சிலர் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிற்கு விருந் தாளிகளாக வந்தனர். அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நெஞ்சிற்கு நெருங்கியவர்களாதலால், அவர்களை அங்கிருந்து உபசரிக்கவே அபூபக்ர் (ரலி) அவர்கள் அதிகம் விரும்பினர். ஆயினும், அவர்களால் அவ்விதம் செய்ய இயலவில்லை. அதற்குக் காரணம், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சமூகம் அவர்கள் ஓர் அவசர அலுவ லாய்ச் செல்ல வேண்டியிருந்தது. எனவே அவர்கள் தம் புதல்வர் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களிடம், ''நான் திரும்பி வருமுன் இவர்களுக்கு உணவு அளித்து விடு!'' என்று கூறிவிட்டுச் சென்றனர். அதன் பிரகாரம் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் விருந்தினர்களுக்கு

உணவு கொணர்ந்து கொடுத்தனர். ஆனால் அவர்களோ, ''அபூபக்ர் வந்த பிறகே உண்போம்!'' எனக் கூறி உணவுண்ண மறுத்து விட்டனர்.

அன்று அபூபக்ர் (ரலி) அவர்கள் வீடு திரும்ப வெகு நேரம் ஆகி விட்டது. விருந்தினர் உணவருந்திச் சென்றிருப்பர் என்னும் எண்ணத் துடன் வந்த அவர்கள், அனைவரும் பட்டினியுடன் அமர்ந்திருப்பதை அறிந்து அதிர்ந்தனர். 'நம் பிள்ளை தான் நமக்காக அவர்களைக் காக்க வைத்துவிட்டார்' என எண்ணியதும் அவர்களுக்குக் கடுஞ்சினம் ஏற்பட்டு விட்டது. அதனால் அவர்கள் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களைப் பார்த்து ''உன்னை என்னுடன் இனிமேல் உண்வுண்ண உட்கார விடமாட்டேன்'' எனப் பிரமாணம் செய்துவிட்டார்கள். அப் பொழுது விருந்தினர்கள் அனைவரும், குற்றவாளி அப்துர் ரஹ்மான் அல்லர், என அபூபக்ர் (ரலி) அவர்களிடம் எடுத்துக் கூறினர். ''அவர் எங்களை உணவருந்தத்தான் கூறினார். நாங்கள் தாம் நீர் இல்லாமல், உண்ண மனமில்லாமல் உட்கார்ந்திருந்தோம். அல்லாஹ் மீது ஆணையாக நீர் அப்துர்ரஹ் மானுடன் உணவுண்ணாவிடில் நாங்களும் உணவுண்ண மாட்டோம்'' என்றும் அவர்கள் உறுதியாக உரைத்தனர். அதன் பின்னர் தான் அபூபக்ர்' (ரலி) அவர்களின் சினம் தணிந்தது.

ஞானமார்க்கத்தின் இமாம்

இம்மை, மறுமை இரண்டின் தன்மையையும் அபூபக்ர் (ரலி) அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். இம்மை வாழ்வில் இலயித்து விட்டால் மறுமை வாழ்வு மறுக்கப்பட்டுவிடும் என்பது அவர்க ளுக்குத் தெரியும். இம்மை வாழ்வில் இலயிக்க வைப்பவை உலக இன்பங்கள், இந்த இன்பங்கள் நிரந்தரமாக இருக்கக் கூடியவை அல்ல என்பதை உணர்த்தத்தான் அவர்கள், ''நீ உலகின் இருப்பதற்குக் காரியம் செய்கிறாய், ஆனால் அதுவோ உன்னை விரட்டுவதற்கு வேலை செய்கிறது'' என்று உரைத்தனர். உலக இன்பங்களில் உள்ளத்தை இழக்கும்போது, என்ன அழிவு ஆரம்பிக்கிறது என்பதை அறிவிக்கத் தான், ''ஓர் அடியான் தன் உள்ளத்தில் உலகின் அழகைப் பெருமை யாகக் காணும் போது, இறைவன் அவனுக்கு விரோதியாகி விடுகிறான். அடியான் உலகின் அழகை (தன் உள்ளத்திலிருந்து) விலக்காத வரை அவன் மீது இறைவன் விரோதமாகவே இருக் கிறான்'' எனக் கூறினார்கள்.

உலக இன்பங்கள் இதயத்தை ஈர்த்து விடாமல் இருக்க வேண்டு மானால், அல்லாஹ் மீது நேசம் கொள்ளுதல் அவசியமாகும்.

அதனால் தான் அவர்கள், ''அல்லாஹ் தன் அன்பிலிருந்து சிறிதள வுர்வது, எவருக்காவது சுவைக்க வைத்து விட்டால், அவர் உள்ளத் திலிருந்து உலக ஆசை அகன்றுவிடும்'' என்றும் ''அல்லாஹ்வுடைய நேசத்தின் இன்பத்தைக் கலப்பில்லாமல் அனுபவித்தவன் எவனோ அவன் உலகை விட்டு விட்டான், படைப்புப் பொருளை விட்டு விட்டான்'' என்றும் கூறினர். இவ்விதம் கூறியதுடன் நில்லாது, அவ் விதமே தான் அவர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரம் முஆவியா (ரலி) அவர்களின் இந்தச் சொற்கள் : ''அபூபக்ர் (ரலி) அவர்களும் உலகைத் தேடித் திரியவில்லை. உலகமும் அவர்களைத் தேடித் திரியவில்லை.

உலக இன்பங்களை உதறிவிட்டு அல்லாஹ்வின் நேசத்தையும், அவன் தூதரின் நேசத்தையுமே அவர்கள் ஆசித்து வாழ்ந்தார்கள். ஒரு நாள் அவர்களிடம் அலீ (ரலி) அவர்கள், ''எங்களை விட உயர்ந்த தன்மைகளைத் தாங்கள் எதன் மூலம் அடைந்தீர்கள்?'' என்று கேட்ட போது, அவர்கள் அளித்த பதில் இது: ''ஐந்து விஷயங்களால் நான் அவற்றை அடைந்தேன். முதலாவதாக, நான் இஸ்லாத்தில் இணைந்த போது, மனிதர் இருவகையினராக இருப்பதைக் கண்டேன். சிலர் இந்த உலகத்தைத் தேடினார்கள். இன்னும் சிலர் இனிமேல் வரக் கூடிய உலகை நாடினார்கள். நான் அல்லாஹ்வை நாடுபவனாக இருக்கிறேன். இரண்டாவதாக, நான் இஸ்லாத்தில் இணைந்ததி லிருந்து இறைவனை நினைவு கூர்வதைத் தவிர்த்து, அவனுக்குத் தொண்டு செய்யும் இன்பத்தைத் தவிர்த்து, இந்த உலகத்தில் ஓர் இன்பத்தையும் காணவில்லை. இவையெல்லாம் இந்த உலகின் இன்பங்களைத் தேடுவதிலிருந்து என்னை விலக்கி வைத்தன. மூன்றாவதாக, நான் இஸ்லாத்தில் இணைந்ததிலிருந்து இந்த உலகின் உணவை வயிறார உண்ணவில்லை. இந்த உலகின் நீரை வயிறு முட்டக் குடிக்கவில்லை. ஏனெனில், அதனால் நான் அறிவை இழந்து விடலாம் என அஞ்சினேன். இறைவனிடமிருந்து விலகி விடுவேனோ எனக் கவலைப்பட்டேன். நான்காவதாக, இரண்டு விஷயங்கள் என்னைச் சந்தித்து, அவற்றில் ஒன்று இறை விருப் பத்திற்கு ஏற்றதாயும், மற்றொன்று என் மனத்திற்கு இணக்கமாயும் இன்பமாயும் இருந்தால் நான் இறை விருப்பத்திற்கு ஏற்றதாய் உள்ளதையே தேர்ந்தெடுப்பேன். இறைவனைத் தவிர்த்து வேறு எவருக்கும் இணக்கமானதை நான் தேர்ந்தெடுக்கவில்லை. ஐந்தா வதாக, நான் அல்லாஹ்வுடைய தூதர் அவர்களின் மிகவும் அழகிய

நட்பை அனுபவித்தேன். ஒரு கணம் கூட அவர்களுடன் இருப்பதை நான் விட்டு விடவில்லை.'' அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் கேள்விக்குப் பதில் கூறத் தொடங்கியதுமே, அலீ (ரலி) அவர்களின் மனம் கனக்க ஆரம்பித்துவிட்டது. அவர்கள் சொல்லி முடிக்கும் போது, அலீ (ரலி) அவர்களின் இருவிழிகளிலிருந்தும் நீர் வழிந்தோடியது. ''அல்லாஹ் அபூபக்ர் அவர்களை ஆசீர்வதிப்பானாக!'' என அவர்கள் தழுதழுத்த குரலில் கூறினார்கள்.

இவ்விதம் தாம் வாழ்ந்த விதத்தை விளக்கிய அபூபக்ர் (ரலி) அவர்கள் நாம் வாழ வேண்டிய விதத்தையும் விரிக்கிறார்கள். அதில் நம்மை ஈடேறச் செய்யும், சுவன வீடேறச் செய்யும் அற்புத அறிவுரைகள் அமைந்திருக்கின்றன. ''மன இச்சையின் ஆதிக்கத்திற்கு வழிப்பட்டு விடாதீர்கள்! இச்சை, ஆசை, கோபம் ஆகியவற்றிலிருந்து தன்னைக் காத்துக் கொள்பவனே வெற்றியாளன். அகப் பெருமையை அழியுங்கள்! இன்று உயிரோடு இருப்பவன், நாளை இறந்து விடுகிறான். நாளுக்கு நாள், நொடிக்கு நொடி (ஏற்படும்) துயரங் களைச் சகித்துக் கொண்டு, பொறுமையாய் இருங்கள்! பொறுமையின் மூலமே நற்செயல்கள் ஒவ்வொன்றும் நடைபெறுகின்றன. அல்லாஹ் வால் அளிக்கப்பட்ட அருள் வேதம், உங்கள் முன் வந்துள்ளது. அதன் அற்புதங்கள் குறையமாட்டா. அதன் ஒளியால் இருண்ட நாளில் ஒளி பெற முயலுங்கள்! தன்னை அஞ்சி நடக்கவே அல்லாஹ் உங்களைப் படைத்தான்; கிராமன், காத்திபீன் எனும் அமரர்கள் நீங்கள் புரியும் காரியங்களைக் கவனிக்க (அல்லாஹ்) உங்கள் மீது சாட்டியுள்ளான். உங்களின் தவணை முடியும் முன்னர் நற்காரியங்களைச் செய்து கொள்ளுங்கள்!''

''நம் வீடு நிலையில்லாதது. நம் வாழ்க்கை கடனாகப் பெற்றது. நம் மூச்சு எண்ணப்படுகிறது. நம் சோம்பல் வெளிப் படையானது.''

இந்த அறிவுரைகள் நம்மை நோக்கிக் கூறப்பட்டவை போல் இருந்தாலும், அவை அபூபக்ர் (ரலி) அவர்கள் தம்மை நோக்கிக் கூறிக் கொண்டவையே. அவற்றில் சொல்லபபட்டதுபோலவே, அவர்கள் தம் புவி வாழ்வில் செயல்பட்டார்கள். அதனால் தான் அவர்கள் 'தஸவ்வுஃப்' என்னும் ஞான மார்க்கத்தின் இமாம் எனக் குறிப்பிடப் படுகின்றனர். ஞாண மார்க்கத்திற்கு உலகின் வலையில் விழா விழிப்பு நிலை அவசியமானதாகும். அத்துடன் இறை நம்பிக்கை, இறையச்சம், இறை நேசம், இறைவன் அளித்தவற்றில் திருப்தி அடைதல், இறை

விருப்பிற்கு முற்றிலும் அடி பணிதல் ஆகிய தன்மைகளும், தேவையானவையாகும். இவை யாவும் அபூபக்ர் (ரலி) அவர்களைத் தம் இல்லமாகவே கொண்டிருந்தன.

ஞான மார்க்கத்தின் இமாமாய் இருந்த அவர்கள், 'சிராத்' என்னும் பாலம் கடக்க அவசியமானதாகும் ஞானம் என்று கூறுகிறார்கள் : ''உலகப்பற்று என்பது ஓர் இருள். அதற்குரிய விளக்கு பேணுதலாக வாழ்வது. பாவம் என்பது ஓர் இருள். அதனை அகற்றுவது, 'தவ்பா' என்னும் விளக்கு. மண்ணறை என்பது ஓர் இருள். அவ்விருளை மாற்றுவது 'கலிமா'வாகிய விளக்கு. மறுமை என்பது ஓர் இருள். அதனை அகற்றுவது நல் 'அமல்கள்' என்னும் விளக்கு. 'சிராத்' என்னும் பாலமும் ஓர் இருளே. அதனை அகற்றுவது 'ஞானம்' என்னும் விளக்கு.''

ஞானம் பற்றி இவ்விதம் கூறிய அவர்கள், கல்வி பற்றிக் கூறிய கருத்துகள் இவை :

''கல்வியின் அளவிற்குத் தக்கபடி அல்லாஹ்வின் அச்சம் இருக்கும். இறைவனுக்கு அஞ்சாதிருப்பது அறியாமை ஆகும்.

''கல்வியுள்ளவன் எவனும், தன்னை இறைவன் என்று கூறவில்லை. செல்வம் வைத்திருப்பவன் தான் அப்படிச் சொல்கிறான்.''

''செல்வம் ஃபிர்அவ்ன், காரூன் ஆகியோரின் சொத்து. கல்வி இறை தூதர்களுடையது.''

''முஃமினுக்கு இந்த அளவு கல்வி போதுமானது. எந் நேரமும் இறைவனுக்கு அஞ்சிக் கொண்டேயிருக்கும் அந்த அளவு.''

''நல்ல அறிவிற்கு அடையாளம் இறையச்சம். பாவச் செயலுக்கு அடையாளம் மடமை.''

அபூபக்ர் (ரலி) அவர்கள் அடைந்திருந்த சிறப்புகளிலெல்லாம் சிறந்தவை அல்லாஹ்வின் பாராட்டும், அல்லாஹ்வின் தூதரின் பாராட்டும் ஆகும். அல்லாஹ்வின் பாராட்டு, அவன் வேதமாகிய திருக்குர்ஆனிலும், அவன் தூதரின் பாராட்டுதல், தூதரின் போதமாகிய அல் ஹதீஸிலும் அடங்கியிருக்கின்றன.

அல்லாஹ்வின் திருமறையில் 'வசயுஜன்னபுஹல் அத்கா'' எனத் தொடங்கும் வசனம் அபூபக்ர் (ரலி) அவர்களின் பக்தி பற்றியே

குறிப்பிடுகிறது என்று இமாம் ஜவ்ஸி (ரஹ்) போன்ற அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். அந்த வசனத்தில் அல்லாஹ் அபூபக்ர் (ரலி) அவர்களை, 'அத்கா' (அதாவது, தீமைக்கு எதிராய்த் தம்மை அதிகம் காத்துக் கொண்டவர்) என்று அழைக்கிறான். இன்னொரு சமயம், ''நிச்சயமாக, அல்லாஹ்வின் பார்வையில் மிகவும் மேலானவர், தீமைக்கு எதிராய்த் தம்மைக் காத்துக் கொண்டவரே'' என்று குறிப்பிடுகின்றான். இந்த இரு வசனகங்களிலிருந்தும் பெறும் கருத்து இது. ''அபூபக்ர் அவர்கள், உங்கள் அனைவரிலும் மிகவும் மேலானவர், தீமைக்கு எதிராய் அதிகம் காத்துக் கொண்டவர்.''

அல்லாஹ்வுடைய தூதரின் ஹதீஸ்களில், அபூபக்ர் (ரலி) அவர்களை மட்டும் குறிப்பிடும் ஹதீஸ்கள் 181 இருக்கின்றன. அபூபக்ர் (ரலி) உமர் (ரலி) ஆகியோரின் உயர் ஒழுக்கங்கள் பற்றி 88 ஹதீஸ்கள் பேசுகின்றன. அபூபக்ர் (ரலி), உமர் (ரலி), உதுமான் (ரலி) ஆகியோர் பற்றி 17 ஹதீஸ்கள் இருக்கின்றன. அபூபக்ர் (ரலி), உமர் (ரலி), உதுமான் (ரலி), அலீ (ரலி) ஆகியோர் பற்றி 14 ஹதீஸ்கள் பேசுகின்றன. இந்த நான்கு கலீபாக்களுடன், இன்னும் சில தோழர் களையும் இணைத்து 16 ஹதீஸ்கள் புகழ்கின்றன. மொத்தத்தில் 316 ஹதீஸ்கள் அபூபக்ர் (ரலி) அவர்களின் உயர்வையும் ஒழுக்கங் களையும் உணர்த்துகின்றன. பல ஹதீஸ்கள் அபூபக்ர் (ரலி) அவர்களின் அறிவான கேள்விகளுக்கு, நபி (ஸல்) அவர்கள் பகர்ந்த படிப்பினைகள் நிறைந்த பதில்களாக அமைந்தவையாகும்.

அல்லாஹ்வின் தூதர் அவர்களும் தமக்கு அடுத்தவர் என்னும் தகுதி உடையவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களே என்னும் கருதப்பட, பல சமயங்களில் பேசியிருக்கின்றனர். அவர்கள் ஒரு சமயம், ''நானும் அபூபக்ரும் பந்தயம் விடப்பட்ட இரு புரவிகளை ஒத்திருந்தோம். நான் அவரை முந்தி விட்டேன். அதனால் அவர் என்னைத் தொடர்ந் தார். அவர் என்னை முந்தியிருந்தால், நான் அவரைத் தொடர்ந் திருப்பேன்'' என்று கூறினர். இறை தூதராய் இவ்வுலகு வரத் தகுதி, அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அடுத்தபடியாக அமைந்திருந்தது அபூபக்ர் (ரலி) அவர்களிடம் தான், என்பதையே இந்த உரை உணர்த்துகிறது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்வைத் தொழ மதீனாவில் முதல் பள்ளி கட்டப்படும் போது, தம் அருள் கையினால் ஒரு கல்லை எடுத்து வைத்துவிட்டு, அதன் மேல் அடுத்த கல்லை

எடுத்து வைக்க அழைத்தது அபூபக்கர் (ரலி) அவர்களைத் தாம். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பகைவர்களே, அவர்களுக்கு அடுத்தவராக அபூபக்ர் (ரலி) அவர்களையே கொண்டிருந்தனர். உஹதுப் போரின் போது அபூசுப்யான், அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கூவி அழைத்து விட்டு, அடுத்து அழைத்தது அபூபக்ர் (ரலி) அவர்களைத்தாம்.

பத்ருப் போரின் போது குறைஷிகளைப் பற்றித் துப்பறிவதற்காகத் தனியே பிரிந்து சென்ற அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம்முடன் அழைத்துச் சென்றது அபூபக்ர் (ரலி) அவர்களைத் தாம்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு நாள் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஆண்களில் தாங்கள் அதிகம் விரும்புவது எவரை?'' என்று வினவிய போது, அவர்கள் குறிப்பிட்டது அபூபக்ர் (ரலி) அவர்களைத் தாம்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு சமயம் கூறினர். ''இறை தூதர்களைத் தவிர்த்து, மனிதர்களில் மேலானவர் அபூபக்ர் தாம். எனக்கு வெளிப்படுத்தப்பட்ட எதனையும் நான் அவர் நெஞ்சில் பொழி''யாது இருந்ததில்லை'' என்று.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இன்னொரு சமயம் இயம்பினர். ''அபூபக்ரின் ஈமானை ஒரு தட்டிலும் உலக மக்களின் ஈமானை ஒரு தட்டிலும் வைத்தால், அபூபக்ரின் ஈமான் இருக்கும் தட்டே தாழும்'' என்று.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மற்றொரு சமயம் மொழிந்தனர், ''அபூபக்ர் உங்களை விட மேலாய் இருப்பது, அவரின் நோன்பாலும் தொழுகையாலும் அல்ல. மதிக்கத்தக்க பொருள் ஒன்று அவர் மனத்தில் இருக்கிறது. அதனால்தான்'' என்று.

இவை அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்பைப் பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிறரிடம் கூறியவை. அபூபக்ர் (ரலி) அவர்களை விளித்து, அவர்களிடம் அவர்கள் நேரில் கூறியவை இவை: ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''அபூபக்ரே!'' என விளித்து, 'அல்லாஹ் உம்மீது தன்னுடைய மிகப் பெரிய அருட்கொடையைப் பொழிந்திருக்கிறான்'' என்று கூறினர். அது கேட்டு அபூபக்ர் (ரலி) அவர்கள், ''அல்லாஹ்வுடைய மிகப் பெரிய அருட்கொடை என்ன?'' என்று கேட்டபோது ''அல்லாஹ் 'லிகா' என்னும் தன் தரிசனத்தை மற்றவர்களுக்குப் பொதுவாகக் காட்டுவான். உமக்குத் தனிப்பட்ட முறையில் காட்டுவான்'' என்று அவர்கள் பதில் கூறினர். இன்னொரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''அபூபக்ரே'' என விளித்து, ''அல்லாஹ்வும் முஸ்லிம்களும் உம்மைப் பற்றி இரு வேறு கருத்துக் கொள்ள மறுக்கின்றனர்'' என மொழிந்தனர்.

தவ்ர் குகையில் அண்ணல் நபி (ஸல்) அவர்களும், அபூபக்ர் (ரலி) அவர்களும் தங்கியிருந்த போது, மக்காக் குறைஷிகள் குகையின் வாயில் வரை வந்துவிட்ட சமயத்தில், தம்முடன் குகையில் இருந்த தோழராகிய அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கி, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ''நீர் கவலைப்படாதீர்! நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்'' என்று கூறித் தம்முடன் அபூபக்ர் (ரலி) அவர்களையும் இணைத்துக் கொண்டனர்.

தவ்ர் குகையில் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குத் துணையாய் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருந்ததைக் குறிப்பிடும் போது, இருவரில் ஒருவர் (ஃதானியஃத்திதனைன்) என்று அல்லாஹ் கூறுகிறான். இதன் மூலம் அல்லாஹ்வே அபூபக்ர் (ரலி) அவர்களை, அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அடுத்தவர் எனக் குறிப்பிட்டு விட்டான்.

ஹஸ்ஸான் இப்னு தாபித் (ரலி) அவர்கள், ''தவ்ர் குகையில் இரண்டாமவர் என்று பெயர் பெற்றாலும் அபூபக்ர் (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உண்மையை ஏற்று, அதனை மெய்ப்பித்தவர்களில் முதலாமவர் ஆவர்'' என்று கூறினார்கள்.

வயது வந்த ஆண்களில், இஸ்லாத்தைத் தழுவிய முதலாமவர் அபூபக்ர் (ரலி) அவர்கள் தாம்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குப்பின் திருமறையை ஒன்று சேர்த்தவர்களும், அதனை 'முஸ்ஹஃப் என அழைத்தவர்களும் அவர்கள் தாம்.

கலீபா என அழைக்கப்பட்ட முதலாமவரும், நேர்வழி நடந்த கலீபாக்கள் எனப் போற்றப்படும் முக்கிய நான்கு கலீபாக்களில் முதலாமவரும், தமக்குப்பின் வரக்கூடிய கலீபாவை முற்கூட்டியே நியமித்த முதலாமவரும் அவர்கள் தாம்.

பொது நிதி என்று ஒன்று இல்லாத போது அதனை நிறுவிய முதலாமவர் அவர்கள் தாம்.

'அதீக்' என்னும் பெயரைப் பெற்ற முதலாமவரும், 'அஸ்ஸித்திக்' என்னும் பெயரைப் பெற்ற முதலாமவரும் அவர்கள் தாம்.

மார்க்கத் தீர்ப்பு வழங்குவதில் முதன் முறையாக 'இஜ்தி ஹாத்' என்னும் முறையை அறிமுகப்படுத்திய முதலாமவர் அவர்கள் தாம். இதுதான் பிறகு முஜ்தஹிதுகளுக்கு ''வழிகாட்டியாக அமைந்தது'' என ஷா வலியுல்லாஹ் அவர்கள் கூறுகின் றனர். 'அபூபக்ர் (ரலி) அவர்கள், இந்த விதியை ஏற்படுத்தியதன் மூலம், அவர்கள் எல்லா முஜ்தஹிது களுக்கும் வழிகாட்டியாகவும், ஆசிரியராகவும் ஆகிறார்கள்'' என்று.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தோழர்களில் சுவனம் புகும் முதலாமவர் அவர்கள் தாம். ''சுவர்க்கத்தின் எல்லா வாயில்களி லிருந்தும் அபூபக்ரின் பெயர் அழைக்கப்படும். என் உம்மத்துகளில், அதில் நுழைபவர்களில், முதல் மனிதராக அவர்கள் தாம் இருப்பார்'' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

''லா இலாஹ இல்லல்லாஹ்'' என்னும் திருக்கலிமாவைத் திரும்பத் திரும்பக் கூறி திக்ரு செய்யும் முறையை அறிமுகப்படுத்திய முதலாமவரும் அவர்கள் தாம்.

திருக்கலிமாவின் சிறப்பை அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடமே நேரில் கேட்டறிந்தனர் என்பதற்கு ஆதாரம் இந்தச் சம்பவம் : அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறந்த அன்று, தாம் அடைந்த அனுபவம் ஒன்றை உதுமான் (ரலி) அவர்கள் உரைக் கின்றனர்: ''அந்தத் துக்கத்தில் தத்தளித்தவர்களில் நானும் ஒருவன். அந்தச் சமயத்தில் உமர் அவர்கள் வந்து எனக்கு சலாம் சொன்னார் களாம். ஆனால் அது எனக்குத் தெரியாது. உமர் அவர்கள் அபூபக்ர் அவர்களிடம் சென்று, 'உதுமானுக்குச் சலாம் கூறினேன். அதற்கு அவர் பதில் கூறவில்லை' என முறையிட்டிருக்கின்றனர். அவர்கள் இருவரும் என்னிடம் வந்து சலாம் கூறினர். அதன்பின் அபூபக்ர் அவர்கள் என்னைப் பார்த்து; 'உங்களின் சகோதரர் உமர் கூறிய சலாத் திற்கு பதில் கூறாததன் காரணம் என்ன?' என்று கேட்டனர். 'நான் அவ்விதம் நடந்து கொள்ளவில்லையே' என்று நான் கூறினேன். 'இல்லை நீங்கள் அவ்விதமே நடந்து கொண்டீர்கள்' என உமர் அவர்கள் கூறினர். நான் 'தாங்கள் வந்தது தெரியாதே, எனக்கு சலாம்

சொன்ன விஷயம் கூட இப்பொழுது நீங்கள் வந்து கேட்டபின் தான் தெரியும்' என்று கூறினேன்.

''அப்பொழுது அபூபக்ர் அவர்கள் 'இப்படித்தான் நடந்திருக்க வேண்டும். நீங்கள் ஏதேனும் சிந்தனையில் இருந்திருப்பீர்கள்'' என்று கூறினர். ''ஆமாம், நான் மிகவும் ஆழ்ந்த சிந்தனையிலே தான் மூழ்கி யிருந்தேன்.'' என்று நான் கூறினேன். ''அது என்ன சிந்தனை?'' என்று என்னைப் பார்த்து அபூபக்ர் அவர்கள் கேட்டனர். ''அல்லாஹ்வின் தூதர் அவர்கள் நம்மை விட்டுப் பிரித்து (போய்) விட்டார்கள். இந்த வேலை யின் ஈடேற்றம் எதன் மூலம் இருக்கிறது என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வில்லையே என்னும் சிந்தனையில் தான் நான் மூழ்கியிருந் தேன்'' என்று நான் சொன்னேன். அதைக் கேட்டு அபூபக்ர் அவர்கள், 'நான் அதனை முன்பே கேட்டு வைத்திருந்தேன்' என்று கூறினர்.

''என் அன்னையும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! மார்க்கத்துடைய எல்லாக் காரியங்களிலும், தாங்கள் முந்தியிருப்பது போல், இதைக் கேட்பதற்கும் தாங்களே தகுதி வாய்ந்தவர்களாய் இருக்கிறீர்கள்'' என்று நான் சொன்னேன். அதற்கு அபூபக்ர் அவர்கள், நான் அல்லாஹ்வின் தூதர் அவர்களிடம் 'ஈடேற்றம் பெற வழி என்ன?'' என்று கேட்டேன். ''என் தந்தை அபூதாலிப் அவர்களின் இறப்பு நேரத்தில் நான் சமர்ப்பிக்க அவர்கள் மறுத்த அந்தத் தூய திருக் கலிமாவாம் 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்பதே 'ஈடேற்றம் பெறும் சாதனமாகும்' என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அறிவித்தார்கள்'' எனக் கூறினார்கள்.

இந்தச் சிறப்புகளுடன் அபூபக்ர் (ரலி) அவர்களை இன்னொரு சிறப்பும் இணைத்திருந்தது. அவர்களின் குடும்பத்தினர் நான்கு தலை முறையினர், அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குத் தோழர்களாய் இருக்கும் அரும் பேற்றை அடைந்திருந்தனர். அபூபக்ர் (ரலி) அவர் களின் தந்தை அபூகுஹாஃபா, அவர்களின் புதல்வர் அப்துர் ரஹ்மான் அவர்கள், பெயரர் அபூ அதீக்முகம்மது ஆகிய அனைவரும் சஹா பாக்கள் என்னும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சகாக்கள் ஆவர்.

இவ்வித முதல் தகுதியுடன், இரண்டாவது தகுதியும் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கே அமைந்திருந்தது என்பதைத் தான் அல்லாமா முகம்மது இக்பால் (ரஹ்) அவர்களின் இந்த உரை உணர்த்துகிறது: ''இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில், இரண்டாவது மனிதர், ஹிஜ்ரத் சென்ற போது, தவ்ர் குகையில் அல்லாஹ்வின் தூதர் அவர் களுடன் இருந்த இரண்டாவது மனிதர், பத்ருப் போர்க் களத்தில்

அல்லாஹ்வின் தூதர் அவர்களை விட்டு, அகலாதிருந்த இரண்டாவது மனிதர், அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்கு சமீபமாக இரண்டாவதாக அடக்கம் செய்யப்பட்டிருக்கும் மனிதர் அபூபக்ர் (ரலி) அவர்களே.''

அபூபக்ர் (ரலி) அவர்களைக் கொண்டு மட்டுமல்ல, அவர்களின் குடும்பத்தினரைக் கொண்டும், அடைந்த நன்மை இது: ஒரு பிரயாணத்தின் போது ஆயிஷா (ரலி) அவர்களின் ஆபரணம் ஒன்று அறுந்து விழுந்துவிட்டது. அதனைத் தேடுவதற்காக அண்ணல் நபி (ஸல்) அவர்களும், மற்றவர்களும் அங்குத் தங்க வேண்டியதாயிற்று. ஆனால் அதுவோ, தண்ணீர் கிடைக்காத இடம். மக்கள் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து, ''ஆயிஷா என்ன செய்துவிட்டார் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? அல்லாஹ்வின் தூதர் அவர்களை நிறுத்தி விட்டார். மக்கள் தண்ணீர் உள்ள இடத்தில் இல்லை. அவர் களிடமும் தண்ணீர் இல்லை'' என்று கூறினர்.

இது அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது. அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்கள் இருக்கும் இடம் வந்தனர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களின் தொடை மீது தலை வைத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். அபூபக்ர் (ரலி) அவர்கள், ஆயிஷா (ரலி) அவர்களைப் பார்த்து ''அல்லாஹ்வின் தூதர் அவர்களை நிறுத்தி விட்டாயா? அவர்கள் தண்ணீர் உள்ள இடத்தில் இல்லை. அவர்களிடத்திலும் தண்ணீர் இல்லை.'' என்று கூறிக் கண்டித்து விட்டு, ஆயிஷா (ரலி) அவர்களின் இடுப்பில் தாம் கையால் குத்தினர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விழித்துக் கொள்வர் என ஆயிஷா (ரலி) அவர்கள் குத்தைப் பொறுத்துக் கொண்டு அசையாதிருந்தனர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விழித்தெழுந்ததும், அல்லாஹ் 'தயம்மும்' பற்றிய வசனத்தை அருளினான். இதை அறிந்த உஸைர் இப்னுஹுளைர் (ரலி) அவர்கள், ''அபூபக்ரின் குடும்பத்தாரே! இது உங்களின் முதல் பரக்கத் அல்ல'' என்று கூறினர். தயமும் ஓர் அருள் என்பதையும் இவ் வித அருள்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைக் கொண்டும், அவர்களின் குடும்பத்தாரைக் கொண்டும், முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் தான் இந்த உரை உணர்த்துகிறது.

மணவாழ்க்கையும் மக்களும்

அபூபக்ர் (ரலி) அவர்கள் நான்கு முறை திருமணம் செய்து கொண்டனர். இருமுறை அறியாமைக் காலத்தில், இருமுறை

இஸ்லாமியக் கோலத்தில். அறியாமைக் காலத்தில் அவர்கள், மணம் புரிந்து கொண்ட பெண்கள் இருவர். ஒருவர் கத்தீலா, மற்றவர் உம்மு ரூமான் (ரலி). கத்தீலா இஸ்லாத்தை ஏற்க வில்லை. உம்மு ரூமான் (ரலி) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். கத்தீலா அபூபக்ர் (ரலி) அவர்களின் இல்லத்தை விட்டு வெளியேறினார். உம்மு ரூமான் (ரலி) அவர்கள், அபூபக்ர் (ரலி) அவர்களின் உள்ளத்தினுள்ளே குடியே றினார். மதீனா வந்த ஆறாம் ஆண்டில் உம்மு ரூமான (ரலி) அவர்கள் உயிர் துறந்தனர். அல்லாஹ்வின் தூதர் அவர்களாலேயே மண்ணறைக்குள் அடக்கப் பெறும் பேறு அடைந்தனர்.

இஸ்லாத்திற்கு வந்த பின், அபூபக்ர் (ரலி) அவர்கள் மணந்து கொண்ட பெண்கள் இருவர். ஒருவர் ஆமிஸின் புதல்வி அஸ்மா (ரலி) மற்றவர் காரிஜாவின் மகள் ஹபீபா (ரலி). மதீனா வந்ததும் அவர்கள் ஹபீபா (ரலி) அவர்களை மணந்தனர். உம்முரூமான் (ரலி) அவர்கள் இறந்ததும் அவர்கள் அஸ்மா (ரலி) அவர்களை மணம் புரிந்து கொண்டனர்.

அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆறு குழந்தைகள் பெற்றனர். அவர்களில் மூவர் ஆண், மூவர் பெண். புதல்வர்களில் மூத்தவர் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் உம் முரூமான் (ரலி) அவர்களுக்குப் பிறந்தவர்கள். இரண்டாவது புதல்வர் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கத்தீலாவுக்குப் பிறந்தவர்கள். அவர்கள் தாயிப் போரில் உயிர் துறந்தனர். மூன்றாவது புதல்வர் முகம்மது (ரலி) அவர்கள் அஸ்மா (ரலி) அவர்களுக்குப் பிறந்தவர்கள். புதல்விகளில் மூத்தவர் அஸ்மா (ரலி) அவர்களின் அன்னை கத்தீலா. அவர்கள் சுபைர் (ரலி) அவர்களுக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டனர். இரண்டாவது புதல்வி ஆயிஷா (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரின் அன்பிற்குரிய மனைவியாய் இருக்கும் அரும் பேறு பெற்றனர். ஆயிஷா (ரலி) அவர் களின் அன்னை உம்முரூமான் (ரலி), மூன்றாவது மகள் உம்முகுல்தாம். அவர்களின் அன்னை ஹபீபா (ரலி). (உம்முகுல்தூமே அபூபக்ர் (ரலி) அவர்கள் இறந்த பின் பிறந்தவர்கள்.)

புதல்வர்களில் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களுக்கும், முகம்மது (ரலி) அவர்களுக்குமே மக்கள் இருந்தனர். அப்துல்லாஹ் (ரலி) அவர்களுக்கு மக்கள் கிடையாது.